# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

பற்றிய

# ஆட்சேபணைகளுக்கு பதில்

**மவ்லானா முஹம்மது உமர் H.A.**
**நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாது, காதியான்**

வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு
**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

Copyrights Reserved

***Ahmadiyya Muslim Jamaath Patriya Aatchiyepanaikalukku Pathil***

*by* **Maulana Muhammad Umar H.A.**

First Edition **October 2009**

Published by :

**ISHA'ATH COMMITTEE TAMIL NADU**
**AHMADIYYA MUSILM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamil Nadu.

# முன்னுரை

அல்லாஹ்வை வணங்குவதற்காக அவன் மனிதனைப் படைத்தான். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவ்வப்போதைய மக்களின் நிலைமைக்கு ஏற்ப, வழிகாட்டக்கூடிய போதனைகளுடன் அல்லாஹ் தன் தூதர்களை அனுப்பி வைத்தான். அந்த வரிசையில், இறுதி நாள் வரையிலும் மக்களுக்குத் தேவையான- முழுமையான போதனைகளுடன் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை 'காத்தமுன்னபிய்யீன்' ஆக அனுப்பி அருள் புரிந்தான்.

பிற்காலத்தில் மக்கள் இஸ்லாத்தின் உண்மையான நடைமுறைகளையும் திருக்குர்ஆனின் உண்மையான போதனை களையும் விட்டு அகன்று பெயரளவில் முஸ்லிம்களாக வாழும் ஒரு காலம் வரும் என்றும் அக்காலத்தில் பெயரளவில் உள்ள அந்த முஸ்லிம்களை மீண்டும் உண்மையான முஸ்லிம்களாக ஆக்குவதற்காக மஸீஹ் இப்னு மர்யம் இந்த உம்மத்தில் தோன்று வார்கள் என்றும் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் முன்னறிவித்து இருந்தார்கள். திருக்குர்ஆன், நபிமொழிகளின் அடிப்படையில் அமைந்துள்ள இந்த முன்னறிவிப்பை எல்லா முஸ்லிம்களும் உண்மை என்று ஏற்றுக் கொண்டு அதன்படி பிற்காலத்தில் இந்த உம்மத்தில் ஒருவர் தோன்றுவார் என உறுதியாக நம்புகின்றனர்.

இந்த முன்னறிவிப்பின்படி உரிய காலத்தில் இறைவன் அனுப்பியுள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியும் நானே என வாதிட்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், தம் வாதத்தில் உண்மையாளர் ஆவார் என நம்புபவர்களே அஹ்மதி முஸ்லிம்கள்!

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் வாதத்தில் உண்மையாளர் என்பதற்கு ஆதாரமாகக் கூறிய விஷயங்களில் முதன்மையானது இதுவாகும்:

அல்லாஹ்வின் தூதர் மஸீஹ் இப்னு மர்யம் இறந்துபோய் விட்டார். அவரின் சாயலில் வாக்குறுதிக்கு ஏற்ப நீர் வந்திருக்கிறீர். (ரூஹானி கஸாயின் பாகம் 3, பக்கம் 402)

இதுவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவ்களின் வாதத்திற்கு அடிப்படையான இறையறிவிப்பு. இந்த இறை அறிவிப்பில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று, ஈஸா நபி (அலை) இறந்து போய்விட்டார்கள் என்பது. இரண்டாவது, நானே வர வேண்டிய ஈஸா என்பது. ஈஸா நபி (அலை) இறந்து போய்விட்டார்கள் என்ற முதற் பகுதி பொய் என்றால் வர வேண்டிய ஈஸா நானே என்ற இரண்டாவது பகுதியும் பொய்யாகிவிடும்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: நம்முடைய மற்றும் நம் எதிரிகளுடைய உண்மையையும் பொய்யையும் சோதிப்பதிற்குரியது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணமும் உயிர் வாழ்ந்திருத்தலும் ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) உண்மையில் உயிரோடு இருக்கிறார் என்றால் நம்முடைய எல்லா வாதங்களும் பொய்யானவை. எல்லா சான்றுகளும் வீணானவை. ஆனால் உண்மையில் அவர் திருக்குர்ஆனின் பார்வையில் இறந்துவிட்டார் என்றால் நம் எதிரிகளின் கூற்று பொய்யானதாகும். தற்போது இடையில் உள்ளது திருக்குர்ஆன் ஆகும். இதனை சிந்தியுங்கள். (துஹ்ஃபாயெ கோல்டுவிய்யா அடிக்குறிப்பு, பக்கம் 178)

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) உயிரோடு இருக்கிறார் என இன்றுவரை எவராலும் நிரூபிக்க முடியாமலிருப்பதும் அவர்கள் இறந்து விட்டார்கள் எனத் திருக்குர்ஆன் உறுதிபட தெளிவாக நிரூபித்துக் கொண்டு இருப்பதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பதற்கு மறுக்க முடியாத சான்றுகளாகும். ஆனால் இன்றைய ஆலிம்கள் திருக்குர்ஆனிலிருந்து ஆதாரம் காட்ட முடியாத நிலையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை பொய்யர் என்று கூறுவது மட்டுமல்லாமல் மிகவும் மோசமான வார்த்தைகளில் விமர்சித்தும் வருகின்றனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய நூல்களிலிருந்து சில மேற்கோள்களை முன்னும் பின்னும் வெட்டி சில வாசகங்களை சுயமாக இணைத்து, பாமர முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக அவர்கள் செயல்பட வழி வகுக்கின்றனர். சமீபத்தில் ஷரிஅத் பாதுகாப்புப் பேரவை வெளியிட்ட பிரசுரமும் சிறிய நூலும் இதற்கு ஆதாரமாகும். இவர்கள் வெளியிட்ட பொய்யான குற்றச்சாட்டுகளை மறுத்து அதன் உண்மை நிலையை பாமர முஸ்லிம்கள் புரிய வேண்டும் என்பதற்காக இந்த நூலை நாம் வெளியிடுகிறோம். மதிப்பிற்குரிய நாஸிர், இஸ்லாஹ்- வ- இர்ஷாது, காதியான் **மவ்லானா முஹம்மது உமர் H.A.** அவர்கள் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் வெளியிட்ட புளுகு மூட்டைகளுக்கு ஆதாரப் பூர்வமான பதில்களை தந்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக. மேலும் அல்லாஹ் இந்நூலைப் படிக்கும் நல்ல உள்ளங்களுக்கு நேர்வழி காட்டுவானாக. ஆமீன்.

10.10.2009 **- வெளியீட்டாளர்**

بسم الله الرحمن الرحيم

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

பற்றிய

# ஆட்சேபணைகளுக்கு பதில்

இறைவன் புறமிருந்து இறைதூதர்கள் தோன்றும் போதெல்லாம் உண்மையின் எதிரிகளான ஷைத்தானின் சீடர்கள் பொய், ஏமாற்றம், துவேஷம், பொறாமை, வைராக்கியம் போன்ற தரங்கெட்ட ஆயுதங்களால் தாக்கிக் கொண்டிருந்ததாக மார்க்க வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. அதே போன்று இறைவனால் அனுப்பப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்களுக்கு எதிராகவும் அவர்களால் நியமிக்கப்பட்ட அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராகவும் ஷைத்தானின் சீடர்கள் கடந்த 120 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கூறப்பட்ட ஆயுதங்களால் தாக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த தாக்குதல் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

‘‘உமக்கு முன்னர் அனுப்பிய ஒவ்வொரு தூதரும், ஒவ்வொரு நபியும் ஏதாவதொன்றினை விரும்பிய போதெல்லாம் அவரது விருப்பத்தின் பாதையில் ஷைத்தான் இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டுதானிருந்தான். ஆனால் அல்லாஹ், ஷைத்தான் ஏற்படுத்துவதை அழித்து விடுகிறான். பின்னர் அல்லாஹ் தன்

அடையாளங்களை உறுதிப்படுத்துகிறான். அல்லாஹ் நன்கு அறிபவனும் நுட்பமான ஞானம் உள்ளவனுமாவான்.'' *(22:53)*

''மேலும் இவ்வாறே நாம் மனிதர்களிலிருந்தும், ஜின்களிலிருந்தும் தீயவர்களை ஒவ்வொரு நபிக்கும் பகைவனாக ஆக்கியுள்ளோம். அவர்கள் ஒருவர் மற்றவரை ஏமாற்றுவதற்காக (இவர்களின் உள்ளங்களில்) பகட்டு மொழிகளால் தீய எண்ணத்தை உருவாக்குகின்றனர். உம்முடைய இறைவன் விரும்பியிருப்பின், அவர்கள் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். எனவே நீர் அவர்களையும் அவர்களின் கட்டுக்கதையையும் விட்டுவிடுவீராக.'' *(6:113)*

கடந்த 120 வருடங்களாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கெதிராக பல நச்சுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவை அனைத்திற்கும் தகுந்த ஆதாரங்களுடன் நாம் பதிலளித்திருக்கிறோம். ஆனால் இன்றும் அந்த பொய்க்கூற்றுகள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒரு பொய், ஆயிரம் தடவை கூறினாலும் பொய் பொய்யாகவே இருக்கும். அது ஒருபோதும் உண்மையாகிவிடாது.

''நீர் கூறுவீராக: உண்மை வந்துவிட்டது. பொய் மறைந்து விட்டது. நிச்சயமாக பொய் மறைந்து விடக்கூடியதாகும். '' *(17:82)*

என்ற வசனத்தின்படி பொய் ஒருபோதும் நீடிக்காது. இப்படிப்பட்ட பொய்யும், புரட்டும் நிறைந்த தாக்குதல்கள் இருந்தும் இன்று 194 உலக நாடுகளில் கோடிக்கணக்கான அஹ்மதி முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உண்மைக்கான சான்றாகும்.

'' காதியானி மதத்தின் உண்மை சொரூபம்'' என்ற தலைப்பில் ஒரு நச்சுப்பிரசுரத்தை ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை தலைவர் அலாவுதீன் வெளியிட்டுள்ளார். அவர் தமது பிரசுரத்தால் உலகில் 20 கோடிக்கு மேல் உள்ள அஹ்மதி முஸ்லிம்கள் நேசிக்கும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களை மிகவும் தரக்குறைவாகவும் இழிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார். மிர்ஸா குலாம் அஹ்மது என்பவன் பிறந்தான். பாதிரிகளிடம் வாதித்து வென்றான். நபியென்று வாதித்தான். இவன் பலரையும் வழிகெடுத்தான்.





கயவன், பொய்யன், காபிர் போன்ற மிகவும் கேவலமான வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார். இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரான இப்படிப்பட்ட சொற்களை பயன்படுத்தும் இவர் இஸ்லாத்தின் ஷரீஅத்தை எங்கிருந்து பாதுகாக்கப் போகிறார்? ஏனெனில் இஸ்லாத்தின் கொள்கையும் இறைவனின் கட்டளையும் இவ்வாறு இருக்கிறது:

''அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். இல்லையாயின், அவர்கள் அறியாமையினால் அல்லாஹ்வை ஏசுவார்கள்.'' (6:109). அலாவுதீனுடைய கேவலமான இந்த கூற்றுக்கு அதே பாணியில் பதில் கூற எங்களால் இயலாது. காரணம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் எங்களுக்கு தந்த போதனை: 'ஏச்சுகளைக் கேட்டு இவர்களுக்காக துஆச் செய்யுங்கள். அகங்காரத்தின் நிலைமையைக் கண்டால் நீங்கள் பணிவு காட்டுங்கள்' என்பதாகும். மற்றொன்று, பாத்திரத்தில் உள்ளதுதானே வெளியில் வரும். எங்களுடைய பாத்திரத்தில் இழிவான வார்த்தைகள், ஏச்சுகள் போன்றவை இல்லை.

ஆனால் இங்கு ஒன்றைக் கூற கடமைப்பட்டுள்ளோம். இறைவன் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அலை) அவர்களுக்கு அளித்த நற்செய்தியில் 'இன்னி முஹீனுன் மன் அராத இஹானத்தக்க' **உம்மை இழிவுபடுத்த நினைக்கின்றவனை நான் இழிவுபடுத்துவேன்** என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த நற்செய்தியின் அடிப்படையில் ஏராளமான விரோதிகள் இறை தண்டனைகளுக்காளானார்கள். ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை தலைவர் அலாவுதீனுக்கும் அவர் தவ்பா செய்யவில்லையெனில் இவைதான் விதிக்கப்பட்டுள்ள தென்பதனை நாம் காணவிருக்கின்றோம்.

இனி சுருக்கமாக ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையின் ஆட்சேபணைகளுக்கு பதில் அளிக்கிறோம்.

**ஆட்சேபணை எண்: 1**

''ஆங்கிலேயர் இவனை வைத்து பணத்தாசைக்காட்டி நிலபுலன்களைக் கொடுத்து இஸ்லாத்திற்கெதிராக தூண்டிவிட்டனர். அதன் காரணமாக 1901ல் தன்னை நபியென்று வாதிட்டான்.''

**பதில்:** இந்த பொய்க் கூற்றுக்கு எங்களுடைய முதல் பதில் லஃனத்துல்லாஹி அலல் காதிபீன் - **பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்** என்பதாகும். ஆங்கிலேய ஆட்சி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கோ அதன் தலைவருக்கோ ஏதாவது பணமோ, நிலமோ, சலுகையோ கொடுத்ததாக தகுந்த ஆதாரங்களுடன் இவர்களால் நிரூபித்துக் காட்ட முடியுமா ? இந்தப் பொய்க் குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பலமுறை தமது எதிரிகளுக்கு சவால் விட்டிருந்தார்கள். ஆனால் அந்த அபாண்டமான பொய்யை மீண்டும் மீண்டும் கூறுகிறார்களே தவிர அதை இவர்களால் இதுவரை நிரூபித்துக் காட்ட முடியவில்லை. இவர்களால் இதனை இறுதி நாள் வரை நிரூபித்துக் காட்டவும் முடியாது.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தமது வருகையின் நோக்கமே கிறிஸ்துவக் கொள்கையை சிலுவையை உடைப்பதுதான் என்று கூறியுள்ளார்கள். அதாவது, ''நான் சிலுவையை உடைப்பதற்கும் பன்றியைக் கொல்வதற்கும் தான் அனுப்பப்பட்டுள்ளேன்.''

*(ஃபத்ஹே இஸ்லாம் பக்கம் : 12)*

''கிறிஸ்தவர்களுடைய தெய்வத்தை மரணிக்கச் செய்யுங்கள். எதுவரை அவரை மரணிக்காமல் இருக்கின்றதாக கூறிக் கொண்டிருப்பீர்கள்? ஓர் எல்லை வேண்டாமா?''

*(இஸாலயே அவ்ஹாம் பக்கம் 169)*

பிரிட்டிஷ் அரசியாயிருந்த விக்டோரியா மகாராணிக்கும் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்து இவ்வாறு எழுதியிருந்தார்கள்:

''மகாராணியே! பாவமன்னிப்பு செய்யுங்கள். ஏக இறைவனின் வழிபாட்டில் வாருங்கள். அவனுக்கு மகனோ கூட்டாளியோ இல்லை. இந்த பூமியின் மகாராணியே! இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளுங்கள். அப்போதுதான் இரட்சிப்பு கிடைக்கும். நீங்கள் முஸ்லிமாகி விடுங்கள்.''

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் : 522)*





வெள்ளையர்களையும் ஐரோப்பிய சமுதாயங்களையும் பாதிரிமார்களையும் முதல்முதலாக தஜ்ஜால் (Anti Christ) என்று கூறியியதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களே!

இவ்வாறு கிறிஸ்தவ அடிப்படை கொள்கைளுக்கு எதிராக கூறியவரும் கிறிஸ்தவர்கள் வழிபடும் இயேசு மரணமடைந்து விட்டார் என்று கூறியவரும் பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியா அவர்களை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள அழைத்தவரும் ஆகிய ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை, பிரிட்டிஷ் ஆட்சி நபியாக்கியிருக்கிறது என்று எவ்வாறு கூறமுடியும்! கிறிஸ்தவ கொள்கைகளையே தவிடுபொடியாக்கிய ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை கிறிஸ்தவ ஆட்சியான பிரிட்டிஷ் அரசு நபியாக்கியிருக்கிறது என்று கூறுவது மிகப்பெரிய வேடிக்கையாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிட்டிஷ் ஆட்சியால் நியமிக்கப்பட்ட ஓர் இயக்கம் என்று குற்றம் சாட்டும் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை தனது ஆலிம்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் பிரிட்டிஷ் ஆட்சியால் உருவாக்கப்பட்ட இயக்கங்கள் இவர்களுடையதுதான் என்பதை எளிதில் புரிய முடியும்.

1. தாருல் உலூம் நத்வத்துல் உலமாவின் மாதப் பத்திரிக்கையான அந்நத்வா இவ்வாறு எழுதுகிறது:

''இந்த தாருல் உலூமிலிருந்து வெளிவரும் ஆலிம்களுடைய மிகப்பெரும் கடமை, ஆங்கிலேயே ஆட்சியின் குணங்களையும் அருட்களையும் நன்கு உணர்ந்து நாட்டு மக்களுக்கு அரசின் குணங்களை எடுத்துக் காட்டி அதற்கு கீழ்படிவதன் அவசியத்தை பரவச் செய்ய வேண்டும் என்பதாகும்.''

*(அந்நத்வா லக்னோ ஜூலை 1908)*

2. அஹ்லே ஹதீஸின் தலைவர் என்று தன்னைப் பற்றி கூறிக்கொண்டிருந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வி கூறுகிறார்:

''இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு ஆங்கிலேய ஆட்சியை எதிர்ப்பது ஹராமாகும்.''

*(இஷா அத்துஸ்ஸுன்னா பாகம் 6 பக்கம் 186)*

அஹ்ராரி இயக்கத்தின் தலைவர் மவ்லவி ஸஃபர் அலி கான் தன்னுடைய ஜமீன்தார் எனும் பத்திரிக்கையில் எழுதுகிறார்:

''ஜமீன்தார் பத்திரிக்கையும் அதனைச் சார்ந்தவர்களும் பிரிட்டிஷ் அரசை இறைவனுடைய நிழல் என்று கருதுகிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய அரசின் நெற்றியிலுள்ள ஒவ்வொரு துளி வியர்வைக்குப் பதிலாக தங்களுடைய உடம்பிலுள்ள இரத்தத்தைச் சிந்த தயாராக இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள அனைத்து முஸ்லிம்களுடைய நிலையும் இதுதான்.''

*(ஜமீன்தார் 19. 11. 1911)*

மீண்டும் அவர் எழுதுகிறார்: ''முஸ்லிம்கள் ஒரு வினாடியாவது இந்த அரசுக்கு எதிராக தப்பெண்ணம் கொள்ள முடியாது. துரதிஷ்டவசமாக ஏதாவது ஒரு முஸ்லிம் அரசிற்கு எதிராக சூழ்ச்சியில் ஈடுபடுகிறாரென்றால், அந்த மனிதன் ஒரு முஸ்லிம் அல்லவென்று உரத்த குரலில் நாங்கள் கூறுகின்றோம்.''

*(ஜமீன்தார். 11. 9. 1911)*

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை பிரிட்டிஷ் அரசு உருவாக்கியதென்று பறைசாற்றும் அலாவுதீனும் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையும் தன்னுடைய முன்னோர்களுடைய இந்த அறிக்கையைப் பற்றி என்ன கூறப் போகிறார்கள்?

**ஆட்சேபணை எண்: 2**

இரண்டாவது குற்றச்சாட்டு ஆங்கிலேயர்கள் காரணமாக 1901 ல் மிர்ஸா சாஹிப் தன்னை நபியென்று வாதிட்டார்கள் என்பதாகும்.

**பதில்:** தான் இறைவன்புறமிருந்து தோன்றியுள்ள நபியென்று எவராவது பொய் வாதம் செய்திருந்தால் அவருக்கு உடனே இறைவன் புறமிருந்து தண்டனை கிடைக்கும் என்பது இறைவனுடைய சட்டமாகும். திருக்குர்ஆன் கூறுவதாவது:

''அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெரு நரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்கள் எவராலும் அவரை (எமது தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது.'' *(69:45-48)*





''அல்லாஹ்வுக்கு எதிரில் பொய்யை புனைந்து கூறுபவர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை.'' *(16 : 117)*

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலேயர் தூண்டிவிட்டதன் காரணமாக அன்னார் நபியென்று வாதித்திருந்தால் மேற்கண்ட வசனங்களின்படி அவரும் அவருடைய ஜமாஅத்தும் எப்போதோ அழிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த ஜமாஅத் நாள்தோறும் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. இதுவரை 196 உலக நாடுகளில் பரவியிருக்கின்றது.

இறைவன் தனது சட்டத்திற்கு மாறுபட்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றானா என்ன? அல்லது இறைவனுக்கு ஆங்கில ஆட்சி மீது பயமா?

அலாவுத்தீனிடமும் ஷரீஅத் பாதுகாப்புப் பேரவையிடமும் கூற விரும்புவதாவது, வெறுப்பின், வைராக்கியத்தின் முகமூடியைக் களைந்து விட்டு மார்க்க சம்பந்தமான இந்த ஆத்மீக விஷயத்தை நேர்மையான முறையில் சிந்தனை செய்யட்டும்.

**ஆட்சேபணை எண்: 3**

காதியானிசம், காதியானி மதம் என்றால் என்ன என்ற தலைப்பில் அலாவுதீன் எழுதுகிறார்:

''பெருமானார் (ஸல்) அவர்களின் இறுதி நபித்துவத்தின் மீது முகமூடித் தாக்குதல் நடத்தி புனித இஸ்லாத்தை சீரழிக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொள்கையாக கொண்டிருப்பதே காதியானி மதமாகும்.''

இந்த பொய்க் குற்றச்சாட்டிற்கு இங்கேயும் எங்களது முதல் பதில் லஃனத்ததுல்லாஹி அலல் காதிபீன் - பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்பதாகும். உலகெங்கும் உண்மையான இஸ்லாத்தையும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மகத்துவத்தையும் திருக்குர்ஆனின் மகிமையையும் உலக மக்களுக்கு எடுத்துக்காட்டி 196 உலக நாடுகளில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வெற்றிக் கொடியை நாட்டியிருக்கும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அது

நபிகள் நாயகத்தின் இறுதி நபித்துவக் கொள்கையைத் தாக்குகிறது என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக அல்லாஹ் பொறுக்காத குற்றச்சாட்டாகும். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தமது வாதத்தைப் பற்றியும் அதன் உண்மையைப் பற்றியும் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

''லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதே, நம் மார்க்க கொள்கையின் சாராம்சம். நம் எஜமானரும் நாயகமுமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் 'காத்தமுன்னபிய்யீனும்' கைருல் முர்ஸலீனும் ஆவார். அவர்கள் மூலமாகவே மார்க்கம் முழுமை பெற்றிருக்கிறது. மனிதர்கள் நேர்பாதையில் ஒழுகி இறைவனை எவ்வழியினால் அணுக முடியுமோ அந்த அருட்கொடை பாதை முழுமை அடைந்து விட்டது. இதுவே நமது நம்பிக்கை. இம்மையிலும் இந்த நம்பிக்கையுடனே நாம் இருக்கிறோம். இவ்வுலகை விட்டுப் பிரியும் போதும் இறைவனருளாலும் உதவியினாலும் இந்த நம்பிக்கையுடனே பிரிவோம்.''

*(இஸாலா அவ்ஹாம் பக்கம்:137, முதற்பதிப்பு)*

மேலும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியிருக்கிறார்கள்:

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நாங்கள் 'காத்தமுன்னபிய்யீன்' என்று நம்புவதில்லை என என்மீதும் என் ஜமாஅத் மீதும் குற்றஞ்சாட்டப்படுகிறது. இது எங்களைப் பற்றிய பெரும் அவதூறாகும். எத்தகு திட நம்பிக்கையுடனும் ஆத்மீக ஞானத்துடனும் அந்தரங்க உணர்ச்சியுடனும் நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை 'காத்தமுல் அன்பியா' என்று உண்மைப்படுத்துகிறாமோ அதில் இலட்சத்தில் ஒரு பகுதி கூட இந்த ஆட்சேபணையை எழுப்புபவர்கள் நம்புவதில்லை.''

*(அல்ஹகம் பத்திரிக்கை 17 மார்ச் 1905)*

''நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை மறுப்பவன் அல்லன். லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதே எனது கொள்கையாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி 'வலாகின் ரசூலல்லாஹி,





வகாத்தமன்னபிய்யீன்' என்பதின்மீது நான் ஈமான் கொண்டுள்ளேன் என்று நான் இறைவன் மீது ஆணையிட்டு கூறுகிறேன். எனது கருத்து உண்மைதான், என்பதற்கு இறைவனுக்கு எத்தனை பெயர்கள் உள்ளனவோ அத்தனை முறை **சத்தியம்** செய்கிறேன். திருக்குர்ஆனில் எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ அத்தனை முறை **சத்தியம்** செய்கிறேன். இறைவனிடத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தனை தகுதிகளை பெற்றுள்ளார்களோ அத்தனை முறை **சத்தியம்** செய்கிறேன்.''

''அல்லாஹ்வின் கூற்றுக்கும், இறைதூதரின் கூற்றுக்கும் மாற்றமான எக்கொள்கையும் என்னுடைய கொள்கையன்று. அவ்வாறு மாற்றமான ஒரு கொள்கையை நான் கொண்டுள்ளதாக யாரும் நினைத்தால் அது அவருடைய தவறாகும். நான் இந்த அளவுக்கு எனது கொள்கயைப் பற்றிக் கூறிய பிறகும் என்னை **காஃபிர்** என்று யாரும் கருதினாலோ, காஃபிர் என்று தீர்ப்பு கொடுத்தாலோ, அவர் மரணம் அடைந்த பிறகு அதற்காக இறைவனிடத்தில் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை அவர் நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளட்டும்.''

*(ஆதாரம், கராமத்துஸ் ஸாதிகீன் பக்கம் :25)*

இந்த மேற்கோளிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகள் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பறுபவர்களும் அந்த நபியின் மீது அளவிலா அன்பும் நேசமும் கொண்டவர்ளே இந்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅதினர் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

**ஆட்சேபணை எண்: 4**

ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்ட நபித்துவத்தின் பெயர்தான் காதியானி மதமாகும்.

**பதில்:** காதியானி மதம் என்று எந்தவொரு மதமும் உலகில் இல்லை. இது கட்டுரை ஆசிரியரைப் போன்ற பொய்யர்கள் தாங்களாகவே உருவாக்கிக்கொண்ட மதம் எனலாம்.

அஹ்மதி முஸ்லிம்கள் ஒருபோதும் தங்களுடைய ஜமாஅத்திற்கு காதியானி மதம் என்றோ காதியானிஸம் என்றோ பெயர் சூட்டவில்லை. அஹ்மதிகளுடைய மார்கம் உண்மையான இஸ்லாத்தைத் தவிர வேறில்லை.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கை கோட்பாடுகளைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் எழுதுகிறார்கள்:

''லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதே நமது மார்க்கத்தின் சாரமாகும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத் தவிர வேறு எவரும் இல்லை; முஹம்மது அவனுடைய தூதர் ஆவார். இவ்வுலக வாழ்வில் நாம் கொண்டுள்ளதும் இவ்வுலகிலிருந்து நாம் பிரியும் வரை இறையருளால் நம்முடனிருப் பதுமான கொள்கை என்னவெனில், எங்களின் ஆன்மீகத் தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனும் கைருல் முர்ஸலீனும் ஆவார்கள். அவர்களின் கையாலே மார்க்கம் முழுமை பெற்றுவிட்டது. அருட்கொடைகளின் தகுதிகள் முழுமை பெற்று விட்டன. அவர்கள் மூலம் மனிதன் நேர்வழியைத் தேர்ந்தெடுத்து இறைவனை அடைய முடியும். மேலும் திருக்குர்ஆன் இறைநூல்களில் முழுமையானது என மிக உறுதியுடன் நம்புகிறோம். அந்நூலின் சுழியோ, புள்ளியோ, சட்டங்களோ, கட்டளைகளோ, ஆணைகளோ, போதனைகளோ கூடவோ குறையவோ செய்யாது. இனிமேல் திருக்குர்ஆனின் போதனைகளை மாற்றவோ நீக்கவோ கூடிய அல்லது ஏதாவதொரு கட்டளையை மாற்றவோ திருத்தவோ கூடிய எந்த இல்ஹாமோ வஹியோ வர முடியாது. எவராவது அவ்வாறு நினைப்பாராயின் எம்மைப் பொருத்தவரை அவர் நம்பிக்கையாளர்களின் கூட்டத்திலிருந்து வெளியேறியவரும், மறுப்போரும் மார்க்கமிழந்தோரும் ஆவார்.'' *(ரூஹானி கஸாயின், தொகுதி 3; பக்கம்: 169,170 இஸாலே அவ்ஹாம்)*

''பூமியில் வாழும் மனித இனமே! மேற்கிலும் கிழக்கிலும் வாழும் ஆத்மாக்களே! நான் மிகவும் அழுத்தமாக இதன் பக்கம் அழைக்கின்றேன். அதாவது இப்பொழுது பூமியில் உண்மையான நெறி இஸ்லாம் மட்டுமே. திருக்குர்ஆன் கூறும் இறைவனே உண்மையான இறைவன். ஆற்றல் மற்றும் தூய்மை ஆகியவற்றின் அரியணையில் அமர்ந்திருக்கும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே நிலையான ஆத்மீக வாழ்வுடைய இறைதூதர் ஆவார்கள்.'' *(ரூஹானி கஸாயின், தொகுதி 15; பக்கம் 141 தர்யாக்குல் குலூப்)*





''அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற் குரியவன் எவனுமே இல்லையென்றும் செய்யதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அவனுடைய திருத்தூதரும் காதமுல் அன்பியாவும் ஆவார்கள் என்றும் நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். மலக்குகள், மறுமை, கேள்விகணக்கு, சொர்க்கம், நரகம் இவையெல்லாம் உண்மைகளென்றும் நாங்கள் நம்புகிறோம். அல்லாஹ் திருக்குர்ஆனில் குறிப்பிடும் அனைத்தையும் நம்புகிறோம். இஸ்லாமிய ஷரீஅத்திலிருந்து ஒரு கடுகளவு அதிகப்படுத்தவோ குறைக்கவோ அல்லது அதன் கட்டளைகளை கைவிடவோ துன்மார்க்கத்திற்கான அடித்தளம் போடவோ செய்கின்றவர் ஈமானில்லாதவரும் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டவருமாவார்.

நாம் நமது ஜமாஅத்திடம் போதிப்பது என்னவெனில், அவர்கள் உளப்பூர்வமாக, 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்ற திருக்கலிமா மீது ஈமான் கொண்டு அதிலேயே நிலைத்து அதிலேயே மரணிக்க வேண்டும் என்பதாகும்.

மேலும் திருக்குர்ஆனிலிருந்து தெரியவரும் எல்லா நபிமார்கள் மீதும் வேதங்கள் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதாகும். அடுத்து, அவர்கள் தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ் ஆகியவற்றை கடை பிடிக்கவேண்டும். அதோடு அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதர் நபிபெருமானார் (ஸல்) அவர்களும் குறிப்பிட்டுள்ள கட்டளைகளையும் கடமைகளாக கருதி அவற்றை நிறைவேற்றி வரவேண்டும் என்பதாகும். சுருக்கமாக கூறுவதென்றால், எந்த கொள்கைகளை ஸலபுஸ்ஸாலிஹீன்கள் (முந்தய நல்லோர்கள்) ஒருமுகமாக ஏற்றிருந்தார்களோ எந்த கொள்கைகள் அஹ்லே சுன்னத்தின் ஏகமனதான கருத்தில் இஸ்லாம் எனப்படுகிறதோ அவற்றின் மீது நம்பிக்கை கொள்வது கடமையாகும். இதுவே எங்களின் மார்க்கம் என்பதை வானத்தையும் பூமியையும் சாட்சியாகக் கொண்டு கூறுகிறேன்.'' *(அய்யாமுஸ்ஸுல்ஹ் - ரூஹானி கஸாயின் பாகம் 14; பக்கம் 323)*

இப்போது நடுநிலையோடு சிந்தியுங்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறும் இந்த கொள்கைகள் புனித இஸ்லாமா ? அல்லது ஆங்கிலேயருடையதா ?

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய புத்தகங்களை படிக்காததே இதுபோன்று ஆட்சேபணைகள் எழ காரணம்.

**ஆட்சேபணை எண் : 5**

''கலிமா தைய்யிபா லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்பதில் உள்ள முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பது மிர்ஸா குலாம் காதியானியைக் குறிக்கின்றது என்பது காதியானி கொள்கை யாகும்.''

**பதில் :** நாங்கள் அஹ்மதி முஸ்லிம்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு கூறுகின்றோம். ஒவ்வொரு அஹ்மதி முஸ்லிமும் கூறும் கலிமா தைய்யிபாவில் உள்ள முஹம்மது ரஸூலுல்லாஹ் என்பதன் பொருள், ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே ஆவார்கள். நிச்சயமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அல்ல. இந்த அவதூறும் இந்த பொய்யர்களின் கைச்சரக்காகும். லஃனத் துல்லாஹி அலல் காதிபீன் – பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.

**ஆட்சேபணை எண்: 6**

''இன்றைக்கு 13 நூற்றாண்டுகளுக்கு முன்னர் ரஹ்மத்துல்லில் ஆலமீனாக, பக்ருல் அவ்வலீன் வல்ஆகரீன் ஆக, இறுதி ரஸூலாக வந்த அதே ரஸூல்தான் இந்த மிர்ஸாகுலாம் அஹ்மத் ஆவான் என்பது காதியானி கொள்கையாகும்''

*(ஆதாரம்: காதியானி மத்ஹப் பக்கம்-24)*

**பதில்:** காதியானி மத்ஹப் எனும் நூல் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கெதிராக எழுதப்பட்ட ஒன்றாகும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை எதிர்ப்பவர்கள் எழுதிய புத்தகத்தை ஆதாரமாக காட்டும் இவர்களை என்னவென்று சொல்வது! அந்த புத்தகத்தில் உள்ள அனைத்து ஆட்சேபணைகளுக்கும் பொய் குற்றச்சாட்டிற்கும் அப்பொழுதே 'ஹமாரா மத்ஹப்' எனும் நூலில் பதில் கூறப்பட்டிருக்கிறது. நிச்சயமாக ஒவ்வொரு அஹ்மதி முஸ்லிமும் எம்பெருமானார் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைதான் ரஹ்மத்துல்லில் ஆலமீனாகவும் ஃபக்ருல் அவ்வலீன் வல்ஆகரீன் ஆகவும் காத்தமுன்நபிய்யீன் ஆகவும் நம்பிக்கை கொள்கிறார்.





**ஆட்சேபணை எண் : 7**

வானம் பூமி ஆகியவற்றிலுள்ள அனைத்து படைப்பினங்களும் மிர்ஸா காதியானிக்காக வேண்டியே படைக்கப்பட்டிருக்கின்றன என்பது காதியானி கொள்கையாகும். *(ஆதாரம் ஹக்கீக்கத்துல் வஹீ பக்கம் : 99)*

**பதில் :** (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸே குத்ஸியில் **லவ் லாக்க லமா கலக்துல் அஃப்லாக்** என்று வருகிறது.அதாவது உம்மை படைக்கும் நோக்கம் இல்லாதிருந்தால் நான் இந்த உலகத்தை படைத்திருக்க மாட்டேன் என அல்லாஹ் கூறுகிறான். இந்த ஹதீஸே குத்ஸியை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக் கொள்கிறது.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஹகீகத்துல் வஹீ என்ற தமது நூலில் 99ஆம் பக்கத்தில் இந்த இறையறிவிப்பைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதே பக்கத்தின் அடிக்குறிப்பில் இதற்கான விளக்கத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்:

''ஒவ்வொரு மகத்தான சீர்த்திருத்தவாதியின் காலத்திலும் ஆன்மிகமான முறையில் புதிய வானம், புதிய பூமி உருவாக்கப்படுகிறது. அதாவது அந்த சீர்த்திருத்தவாதியின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பணியில் வானவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். மேலும் பூமியில் பாக்கியமுள்ள இயல்புடையவர்கள் உருவாக்கப்படுகின்றனர். எனவே இது அதைத் தான் சுட்டிக் காட்டுகிறது.'' (ஹகீகத்துல் வஹீ, பக்கம் 99ன் அடிக்குறிப்பு)

இந்த அண்ட சராசரங்கள் அனைத்தும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்காக, அதாவது எந்த உயர்ந்த நோக்கங்களுக்காக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ் படைத்தானோ, அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக படைக்கப்பட்டுள்ளன. அதற்காகவே ஒவ்வொரு நபியும் உலகத்திற்கு வந்தார்கள். இந்த வகையில் ஒவ்வொரு நபியும் தத்தமது காலத்தில் உம்மை படைக்கும்

நோக்கம் இல்லாதிருந்தால் இவ்வுலகத்தை படைத்திருக்க மாட்டேன் என்ற வார்த்தைக்கு பொருந்துபவராக இருக்கிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு மகத்தான சீர்த்திருத்தவாதியின் காலத்திலும் இந்த ஹதீஸே குத்ஸீ நிறைவேறி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. உதாரணமாக, ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

‘‘இறை நேசர்களுக்காகவே வானம் பொழிகிறது, பூமி விளைகிறது. மேலும் அவர்கள் நாடுகளுக்கும், மனிதர்களுக்கும் பாதுகாவலர்களாக விளங்குகிறார்கள். அவர்களின் காரணமாகவே படைப்பினங்களிடமிருந்து சோதனைகள் விலகுகின்றன.’’ (ஆதாரம்: அல்ஃபத்ஹுர் ரப்பானீ, பக்கம் 71)

இந்த கோணத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தொடர்பாகவும் அல்லாஹ் இந்த வஹீயை அறிவித்திருக்கும்போது, வானம், பூமி ஆகியவற்றிலுள்ள அனைத்து படைப்பினங்களும் மிர்ஸா காதியானிக்காக வேண்டி மட்டுமே படைக்கப்பட்டிருக்கின்றன என்பது காதியானி கொள்கை என குறிப்பிட்டிருப்பது மாபெரும் அபாண்டமாகும். இதனை ஆட்சேபணைக்குரியதாக சித்தரித்துக் காட்டுபவர்கள், ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்களின் காலத்தில் இருந்திருந்தால், அவர்களின் மீதும் இதே அபாண்டத்தைத் தான் சுமத்தியிருப்பார்கள்.

**ஆட்சேபணை எண் : 8**

வானிலிருந்து இறங்கிய பதவியெனும் அரியாசனங்களிலேயே மிர்ஸா காதியானியின் அரியாசனம் மிகவும் உயர்ந்தது என்பது காதியானி கொள்கையாகும். *(ஆதாரம் ஹக்கீக்கத்துல் வஹீ பக்கம் : 89)*

**பதில் :** இந்த சொற்றொடரில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் எங்கேயுமே தமது தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் தம்மை ஒப்பிட்டுக் குறிப்பிடவில்லை. மிர்ஸா ஸாஹிபின் அரியாசனம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அரியாசனத்தை விட உயர்ந்தது என்று அவர்கள் கூறுவதாக, எதிரிகள் மக்களிடம் திரித்துக் கூற





முற்பட்டிருக்கின்றனர். மேல் கூறப்பட்ட பக்கத்தில் இறைவன் புறமிருந்து தமக்கு கிடைத்த சில இல்ஹாம்களைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவைகளில் ஒன்று இதுவாகும். அஹ்மதிகளுடைய கொள்கை இந்த காலத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கிடைத்த ஆத்மீகப் பதவியானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாக கீழ்ப்படிந்ததன் காரணமாக கிடைத்த பதவியாகும். மேலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றியதனாலேயே தனக்கு இந்த பதவி கிடைத்திருப்பதாக எழுதியுள்ளார்கள். இவ்வாறு அவர்களுக்குக் கிடைத்த ஆத்மீகப் பதவி மிகவும் மேலானதாகும். ஒரு சீடருக்கு கிடைத்த பதவி மேலானதாக இருக்கும்போது அவருடைய ஆத்மீக குருவுக்கு, ஆத்மீக எஜமானருக்கு கிடைத்த பதவி எவ்வளவு மேலானதாக இருக்கும் என்பது சிந்தனைக்குரிய விஷயமாகும். எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களே அதற்கு விளக்கம் எழுதிவிட்டப் பிறகு அதற்கு மாற்றமான ஒரு விளக்கத்தை திரித்து எழுதியிருக்கும் இந்த ஆலிம்களை என்னவென்று சொல்வது!

**ஆட்சேபணை எண் : 9**

நபி (ஸல்) அவர்களுக்கு 3000 அற்புதங்கள் தான் கொடுக்கப்பட்டன. ஆனால் மிர்ஸாவுக்கு 3 லட்சத்திற்கும் அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளன என்பது காதியானிக் கொள்கையாகும். *(துக்பா கோல்டவிய்யா பக்கம் 63, ஹக்கீகத் துல்வஹீ பக்கம் 67)*

**பதில் :** முதலில் இது மேலே கூறப்பட்டது போன்று ஒரே செய்தி அல்ல. இரண்டு வெவ்வேறு நூல்களிலிருந்து வெட்டி எடுத்து ஒட்ட வைத்திருக்கிறார்கள். இது யூத, கிறிஸ்தவர்களின் இழிவான செயலாகும். அதைதான் இந்த ஆலிம்களும் செய்திருக்கிறார்கள்.

மேல் கூறப்பட்ட ஹக்கீக்கத்துல் வஹீ எனும் நூலில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) எழுதுகிறார்கள்:

‘‘எனக்கு துணையாகவும் சாதகமாகவும், எனக்கு பல அடையாளங்களை வெளிப்படுத்தியிருக்கின்றான். இன்றைய நாள்வரை அதாவது 1906 ஜூலை 16ஆம் தேதி வரை அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் நான் இறைவன் மீது ஆணையிட்டு

கூறுகிறேன். அந்த அடையாளங்கள் 3 லட்சத்திற்கு மேல் இருக்கும். எனது இந்த ஆணையின் மீது எவருக்காவது நம்பிக்கை இல்லையானால் நான் அதற்குள்ள சான்றுகளைத் தர இருக்கிறேன்'' (ஹகீகத்துல் வஹி பக்-67)

மேலும் அதே நூலின் பிற பக்கங்களில் ஏராளமாக மறுக்க முடியாத அடையாளங்களை எடுத்துரைத்திருந்தார்கள்.

தொஹ்பா கோல்டவிய்யா எனும் மற்றொரு நூலில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 3000 அற்புதங்கள் கிடைத்திருந்தன என்று கூறியதை இந்த மவ்லவி குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இரண்டு புத்தகங்களில் குறிப்பிட்டதை ஒன்றாக சேர்த்து மக்களை ஏமாற்ற முற்பட்டிருக்கிறார்.

தமது உண்மைக்கு ஆதாரமாக 3 லட்சம் **அடையாளங்கள்-நிஷான்** தரப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 3000 **அற்புதங்கள் (முஃஜிஸாக்கள்)** கொடுக்கப்பட்டன என்று கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு முஃஜிஸாத்தும் ஏராளமான அடையாளங் களைக் கொண்டதாக இருக்கும்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

''எந்த அளவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முஃஜிஸாத்துகள் (அற்புதங்கள்) கிடைத்திருக்கின்றனவோ அந்த அளவில் எந்த நபிக்கும் முஃஜிஸாத்துகள் எனும் அற்புதங்கள் கிடைக்கவில்லை. முற்கால நபிமார்களுடைய முஃஜிஸாத்துகள் அவர்களுடைய மரணத் துடன் முடிவு பெற்றுவிட்டன. ஆனால் நமது நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முஃஜிஸாத்துகள் இதுவரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இறுதி நாள் வரை வெளிப்பட்டு கொண்டே இருக்கும்.'' *(ததிம்மா ஹக்கீக்கத் துல் வஹீ பக்கம் : 35)*

தமக்கு கிடைத்த முஃஜிஸாத்துகளின் உண்மையைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை) கூறுகின்றார்கள்:

''எனக்கு ஆதரவாக வெளிப்படுவதெல்லாம் உண்மையில்





ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அற்புதங்களே ஆகும்.''

*(ததிம்மா ஹக்கீகத்துல் வஹீ பக்கம் : 35)*

இங்கு ஒரு உண்மையைக் கூற நாடுகிறேன். பொய் சரக்குகளை அவிழ்த்துவிடும் அலாவுதீன் என்பவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய 80 க்கும் அதிகமான நூல்களில் ஒரு நூலைக் கூட படிக்கவோ, பார்க்கவோ இல்லாமல் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக எழுதப்பட்ட காதியானி மத்ஹப் போன்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பொய்க்குற்றச்சாட்டுகளைத்தான் காப்பியடித்து எழுதியிருக்கிறார்.

**ஆட்சேபணை எண் : 10**

''நபி (ஸல்) அவர்களை விட மிர்ஸா காதியானி மிக அறிவுத்திறன் பெற்றவராக இருந்தார் என்பது காதியானிக் கொள்கையாகும். *(காதியானி மத்ஹப் பக் : 241)*

**பதில் :** இது மிகப் பெரிய அவதூறு ஆகும். மேலே ஆதாரமாக காட்டப்பட்டுள்ள காதியானி மத்ஹப் என்ற நூல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிரிகளால் எழுதப்பட்டதாகும். இதற்கு நாம் கூறும் ஒரே பதில் பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக. இவ்வாறு ஒரு வாக்கியத்தை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எந்த நூலிலும் காண முடியாது. ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை)அவர்கள் தமது எல்லா நூல்களிலும் தாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எளிய தாசன் என்றும் தமக்கு கிடைத்த அனைத்து ஞானங்களும் அறிவுகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கிடைத்தவையென்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கிடைத்த ஓர் இல்ஹாம். **''குல்லு பரக்கத்தின் மின்முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஃபதபாரக்க மன் அல்லம வ தஅல்லம''** என்பதாகும். அதாவது எல்லா இறையருட்களும் முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்துள்ளவையாகும். கற்றுக் கொடுப்பவரும் (முஹம்மது நபி) கற்றுக் கொடுக்கப்படுகிறவரும் (அஹ்மது) அருளுக்குரியவராகிறார்கள்.''

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகிறார்கள் : ''நாம் எம்மாத்திரம்! நமது உண்மை நிலை என்னவாக இருக்கின்றது. உண்மையான தௌஹீதை நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து தான் பெற்றிருக்கின்றோம் என்று ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் நாம் இறையருளுக்கு நன்றியில்லாதவராக இருப்போம். உயிருள்ள இறைவனை அந்த முழுமையான நபி மூலமாகத்தான் நாம் அறிந்திருக்கின்றோம். எம்பெருமானாருடைய ஒளியிலிருந்துதான் நாம் ஒளியைப் பெற்றிருக்கின்றோம். இறைவனுடன் பேசும் வாய்ப்பினை நாம் அன்னாரிடமிருந்துதான் பெற்றுள்ளோம். அந்த மதிப்பிற்குரிய நபியின் மூலமாகத்தான் இறைவனுடைய முகத்தை நம்மால் காணமுடிந்தது.

*(ஹக்கீகத்துல் வஹீ பக்கம் 115, 116)*

அவர்கள் மீண்டும் கூறுகின்றார்கள்:

''மனித சமுதாயத்திற்காக இந்த பூமியின் மீது திருக்குர்ஆனைத் தவிர வேறு நூல் கிடையாது. ஆதமின் சந்ததிகளுக்காக முஹம்மது நபி (ஸல்) அவர்களை தவிர வேறு இறை தூதரோ பரிந்துரையாளரோ கிடையாது. அந்த கௌரவத்திற்குரிய நபியுடன் உண்மையான நேச உறவு வைக்க முயற்சி செய்யுங்கள். அன்னாரைத் தவிர ஏனையோருக்கு எந்தவிதமான மகத்துவமும் கொடுக்காமல் இருக்க வேண்டும். அப்போது தான் நீங்கள் வானத்தில் மோட்சத்திற்குரியவராக இருப்பீர்கள். மோட்சத்திற் குரியவர் யார்? இறைவன் உண்மையானவன் என்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்)அவர்கள் மட்டுமே அல்லாஹ்வுக்கும் அவனது படைப்பினங்களுக்குமிடையில் பரிந்துரை செய்பவர் ஆவார் என்றும் ஏற்றுக் கொள்பவர்தான். வானத்தின் கீழ் எம்பெருமானாருக்கு ஒப்பான எந்த ஓர் இறை தூதருமில்லை. திருக்குர்ஆனுக்கு ஒப்பான எந்தவொரு வேத நூலும் இல்லை''. *(கிஷ்தீ நூஹ் பக்கம் - 13)*

இது போன்ற ஏராளமான மேற்கோள்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடைய உருது, ஃபார்ஸீ, அரபி நூல்களில் காணப்படுகின்றன. உண்மை இவ்வாறிருக்க மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு என்ன அர்த்தம் தான் இருக்கிறது.





அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுகளை கூறுபவர்களே! நீங்கள் இறைவனை பயப்படுங்கள்! இல்லையெனில் அவனது தண்டனை உங்களை எதிர்ப்பார்த்து கொண்டிருக்கிறது என்பதை ஞாபகம் வைத்து கொள்ளுங்கள்.

''காதியானிக் கொள்கைகளைப்பற்றி படிக்கும் போது ரத்தம் கொதிப்படைந்து நரம்பு முறுக்கேறுகிறது'' என்று அலாவுதீன் எழுதியிருக்கிறார். அலாவுதீன் அவர்களே! இது ஒரு பயங்கரமான நோய். இந்த நோயினால் எளிதில் மாரடைப்பு வருவதுண்டு. ஆகவே ஒரு நல்ல டாக்டரைச் சந்தித்து உடனே சிகிச்சை பெறவும். இல்லையெனில் அது உமது உயிரையே பாதிக்கக் கூடும். மேலும் இது ஒரு தொற்றுநோய்! ஏனைய பாமர மக்களையும் அது பாதிப்பிற்குள்ளாக்கக் கூடும்.

**ஆட்சேபனை எண் : 11**

அஹ்மதிய்யா ஜமாஅத்தை பாகிஸ்தான் அரசாங்கம் காபிர் என்று தீர்ப்பளித்து விட்டது என்று கூறுகின்றனர். இந்த பூச்சாண்டி காட்டி அஹ்மதி முஸ்லிம்களை பயமுறுத்த வேண்டாம். அஹ்மதிகளை முஸ்லிமல்லாத சிறுபான்மையினர் என்று தீர்ப்பளித்த பூட்டோவுக்கும், ஸியாவுல் ஹக்கிற்கும் ஏற்பட்ட பயங்கரமான இறை தண்டனையை மறந்து விடாதீர்!

இன்று முஸ்லிம் சமுதாயத்தில் குப்ர் பத்வா கிடைக்காத எந்த ஒரு பிரிவு தான் இருக்கிறது. ஒவ்வொரு பிரிவும் ஏனைய பிரிவைப் பற்றி குப்ர் பத்வா - முஸ்லிமல்லாதவர் என்று கூறிய ஆதாரங்கள் நம்மிடமுண்டு. அஹ்லே ஸுன்னத் பிரிவினர் அஹ்லே ஹதீஸ் பிரிவினரையும் அஹ்லே ஹதீஸ் அஹ்லே ஸுன்னத்தையும், தேவபந்திகள் பரேல்விகளையும் பரேல்விகள் தேவபந்திகளையும், தப்லீக் ஜமாஅத் ஜமாஅத்தே இஸ்லாமியையும் ஜமாஅத்தே இஸ்லாமி தப்லீக் ஜமாஅத்தையும் இவ்வாறு ஒவ்வொரு பிரிவும் ஏனைய பிரிவுகளை குப்ர் பத்வா கொடுத்து இஸ்லாத்திலிருந்தும் வெளியேற்றினார்கள். ஆகவே இந்த குப்ர் பிரிவுகள் அஹ்மதிகளுக்கெதிராகக் கொடுத்த குப்ர் பத்வாவை அஹ்மதி முஸ்லிம்கள் குப்பைத் தொட்டியில் தான் போட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த பூச்சாண்டிகளுக்கு இங்கு ஆதாரம் காட்ட வேண்டியதில்லை!

**ஆட்சேபணை எண் : 12**

விபசாரிகளின் குழந்தைகள் மட்டுமே எனது வேதங்களையும் எனது வாதத்தையும் பேச்சுகளையும் என்னையும் மறுப்பார்கள். மற்றவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக் : 547)

**பதில்** : இந்த குற்றச்சாட்டும் இவர்களின் பொய் குற்றச்சாட்டாகும். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் விபச்சாரிகளின் குழந்தைகள் என்று ஒருபோதும் கூறவில்லை.இது பாமர முஸ்லிம்களை திசை திருப்பி உணர்ச்சி வசப்படுத்தி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தினருக்கு எதிராக தூண்டி விடுவதற்காக இந்த முல்லாக்கள் செய்த விஷம வேலையாகும். விபச்சாரிகளின் குழந்தைகள் என்பதற்கு **அவ்லாதுஸ்ஸினா** என்பதுதான் அரபி மொழியாக்கமாகும். ஆனால் இங்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் ஏற்றுக் கொள்ளாத கடும் எதிரிகளைப் பற்றித்தான் **துர்ரிய்யத்துல் பகாயா**-நெறிகெட்டவர்கள், நேரிய மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றவர்கள் என்று கூறினார்களே அல்லாமல் தம்மை எதிர்ப்பவர்களைப் பற்றி இவ்வாறு கூறவில்லை.

**ஆட்சேபணை எண் : 13**

எனக்கு மாறு செய்பவர்கள் பன்றிக் குட்டிகள் என்றும் அவர்களின் மனைவிமார்கள் நாய்களை விட இழிவானவர்கள் என்றும் மிர்ஸா கூறுகிறார். (அந் நஜ்முல் ஹுதா பக்கம் : 15)

ஹஸ்ரத் அஹ்மது (அலை)அவர்கள் அந்நஜ் முல்ஹுதா என்ற நூலிலோ வேறு ஏதாவது நூலிலோ தனக்கு மாறு செய்பவர்களைப் பற்றி இவ்வாறு கூறவே இல்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) மேற்கூறப்பட்ட நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்.

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தரக் குறைவாகப் பேசுகின்ற எழுதுகின்ற (இந்த கடும் எதிரிகள்) காடுகளில் வாழும் பன்றிகளாகி விட்டனர். அவர்களின் பெண்கள் நாய்களைவிடவும் மோசமானவர்களாகி விட்டனர். அவர்கள் நமது ஹஸ்ரத் நபிகள் நாயகத்தை ஏசினர். ஏன் ஏசினர் என்பது எங்களுக்குத் தெரியாது.





நாம் இந்த எஜமானர் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களை எதிர்ப்பதையோ அல்லது புறக்கணித்து ஒதுக்குவதையோ நினைத்துக் கூட பார்க்க முடியாது. சிங்கங்கள் அல்லது ஓநாய்கள் நம்மை கடித்து துண்டு துண்டாக்கினாலும் சரி நான் அன்னாரை விட்டு விலகமாட்டேன்.'' *(நஜ்முல்ஹுதா)*

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தரக்குறைவாகப் பேசியவர்களுக்காக திருக்குர்ஆனின்படியே அவர்களுக்கு பதிலடி கொடுத்தார்கள். திருக்குர்ஆனில் சில கடும் எதிரிகளையும் பொய்ப்படுத்துபவர்களையும் அவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்காக அல்லாஹ் அத்தீயவர்களை நாய்கள் என்றும் (7:177) கழுதைகள் என்றும் (62:6) குரங்குகள் பன்றிகள் என்றும் (5:61) கூறுகின்றான். இந்த சொற்கள் எல்லா மக்களையும் பார்த்து கூறப்பட்டவை அல்ல.

திருமறையின் இந்த நடைமுறையைப் பின்பற்றித்தான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் கடும் எதிரிகளுக்காக கடும் சொற்களை பயன்படுத்தினார்கள். ஆனால் இந்த முல்லாக்கள் அந்த சொற்களை திரித்துவளைத்து முஸ்லிம்களுக்கு பொருத்திக் காட்டுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

முஸ்லிம்கள் தான் இந்த தரம் கெட்ட முல்லாக்களின் பிடியில் சிக்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

கடைசி காலத்தின் ஆலிம்களைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலமாவுஹும் ஷர்ரும் மன்தஹ்த்த அதீமிஸ் ஸமாயி - அவர்களுடைய (சீர்குலைந்த முஸ்லிம்களுடைய) உலமாக்கள் வானத்தின் கீழ் மிகவும் கெட்டவர்களாக இருப்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள். (மிஷ்காத்) மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

''என்னுடைய உம்மத்தில் பரபரப்பு உண்டாகும் ஒருகாலம் வரும். அப்போது மக்கள் தங்களது ஆலிம்களின் பக்கம் செல்வார்கள். அப்போது அந்த ஆலிம்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் தோற்றமளிப்பார்கள்.'' (கன்ஸுல் உம்மால்)

ஹஸ்ரத் ஷேய்க் அஹ்மத் ஸர் ஹிந்தி (முஜத்திக் அல்பு ஸானி)

தன்னுடைய காலத்திலுள்ள ஆலிம்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

''ஆலிம்கள் உலக ஆசையில் மூழ்கியிருக்கின்றார்கள். எல்லோரையும் விட கொடியவரும், துரோகிகளும், திருடர்களும் இந்த கெட்ட ஆலிம்களேயாவர். இப்படி இருந்தும் இவர்கள் தங்களை மக்களுடைய வழிகாட்டி களாகவும், எல்லோரையும்விட உயர்ந்தவர் களாகவும் காட்டி நடிக்கிறார்கள். என்னுடைய ஒரு நண்பர் ஒரு கனவில் ஷைத்தான், மக்களை வழி கெடுக்காமல் உட்கார்ந்திருந்ததாக பார்த்தார். அதன் காரணத்தைப் பற்றிக் கேட்டதில் இக்காலத்திலுள்ள ஆலிம்கள் என்னுடைய வேலையை (மக்களை வழிகெடுத்தலை) ஏற்றிருக்கிறார்கள் என்று ஷைத்தான் விடையளித்தான். இன்று ஷரீஅத்திற்கு எதிரான எல்லா நடைமுறைகளுக்கும் சமுதாயத்தில் பரவியிருக்கும் எல்லா கேடுகளுக்கும் காரணகர்த்தாக்கள் இந்த சீர் கெட்ட ஆலிம்கள்தான் என்பது ஒரு உண்மையாகும்.''

*(மக்தூபாதே இமாம் ரப்பானி பாகம் 1, பக் : 74)*

12-ம் நூற்றாண்டின் முஜத்திதான ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்தஸ் (ரஹ்) கூறுகின்றார்கள்:-

''யூதர்களுடைய முன்மாதிரியைக்காண நீங்கள் நினைக்கின்றீர்களென்றால் உலக ஆசையில் மூழ்கியிருக்கும் இந்த சீர்கெட்ட ஆலிம்களைப் பார்க்கவும்.'' *(அல்பௌஸுல் கபீர் பக் : 10)*

அஹ்லே ஹதீஸின் புகழ் பெற்ற ஆலிமான அல்லாமா ஸித்தீக் ஹஸன் கான் கூறுகின்றார்கள்:-

''இந்த உம்மத்திலுள்ள ஆலிம்கள் வானத்தின் கீழ் உள்ளவர்களில் மிகவும் வெறுக்கத்தக்கவராவார்கள். குழப்பங்கள் அவர்களிலிருந்து புறப்பட்டு அவர்களிடமே திரும்புகின்றன.''

*(இக்திரா புஸ்ஸாஅத் பக் : 12)*

அஹ்லே ஹதீஸின் மிகப் பெரிய ஆலிமான மௌலவி ஸனா வுல்லாஹ் அமிர்தஸரீ தற்போதைய ஆலிம்களைப் பற்றி தன்னுடைய பத்திரிக்கையான அஹ்லே ஹதீதில் இவ்வாறு கூறுகிறார்:





''நாம் வழிகாட்டிகள் என்றும், நபிமார்களுடைய வாரிசுகள் என்றும் நினைத்திருக்கும் இந்த மௌலவிமார்களுடைய நிலைமை அந்தோ பரிதாபம். இவர்கள் இவ்வாறு அகம்பாவமும் தற்பெருமையும் சுய விருப்பமும், ஷைத்தானியத்தும் நிறைந்த நிலையில் இருப்பதால் நாம் எதற்காக ஷைத்தானைப் பழிக்க வேண்டும்?''

*(அஹ்லே ஹதீஸ் 17-11-1911)*

''இன்று மௌலவிமார்கள் அழிந்தொழியும் இவ்வுலகத்தை நாடுகின்றவர்களாக மாறியிருக்கின்றார்கள். திருநபி தந்த ஞானத்தின் வாரிசுகளைக் காணமுடியவில்லை.''

*(அஹ்லே ஹதீஸ் 31-5-1912)*

தற்போதைய ஆலிம்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் குழப்பங்களையும், வேற்றமைகளையும் உண்டாக்கி சமுதாயத்தை எவ்வாறு சீர்குலைத்திருக்கின்றார்கள் என்பதைப் பற்றி அதிகமாக விளக்கத் தேவையில்லை. இப்படிப்பட்ட உலமாக்களை முஹம்மது நபியின் வாரிசுகளென்று நம்பி சமுதாயத்தை அவர்களிடம் ஒப்படைத்தால் சமுதாயத்தின் கதி என்னவாகும் என்பதை மக்களின் சிந்தனைக்கு விட்டு விடுகின்றோம்.

இப்படிப்பட்ட நிலை வரும்போதுதான் இறைவன் இஸ்லாத்தைக் காப்பாற்றுவதற்கும் மக்களை சீர்திருத்துவதற்கும் இமாம் மஹ்தியை அனுப்புவேன் என்று கூறியுள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளார்கள்.

ஆனால் இமாம் மஹ்தி வரும்போது அவரது கொடிய விரோதியாக இந்த ஆலிம்கள் இருப்பார்கள் என்பது ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டுள்ள உண்மையாகும்.

ஹஸ்ரத் ஷைக் முஹியித்தீனிப்னு அரபி (ரஹ்) அவர்கள் தம்முடைய 'புதுஹாத்தே மக்கியா' என்னும் நூலில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:-

''இமாம் மஹ்தி தோன்றினால் அவருடைய மாபெரும் எதிரிகள் ஆலிம்களும் புகஹாக்களும் ஆவார்கள்.''

*(புதூஹாத்தே மக்கியா பாகம் 2 பக்:242)*

எனவே இந்த காலத்தில் தோன்றிய வாக்களிக்கப்பட் மஹ்தியை ஆலிம்கள் புறக்கணித்து எதிர்ப்பு தெரிவிக்கிறார் கள் என்றால் அதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

**ஆட்சேபனை எண் : 14**

நமது வெற்றியை ஏற்காதவர்கள் ஹராத்தில் பிறந்தவர்கள்
*(அன்வாருல் இஸ்லாம் பக் : 30)*

**பதில்:** ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அன்வாருல் இஸ்லாம் என்ற நூலில் கூறியதை முன்னும் பின்னும் வெட்டி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

திருக்குர்ஆனின் வசனங்களை வெட்டி தப்பான முறையில் விளக்கம் தரும் இஸ்லாத்தின் எதிரிகள் கையாண்ட நிலைமையை தான் இந்த எதிரிகளும் கையாண்டருக்கின்றனர். அதாவது **லாதக்ரபுஸ் ஸலாத்த** (நீங்கள் தொழுகையை அணுகாதீர்கள்) **ஃபவைலுல்லில் முஸல்லீன்** (தொழுபவர்களுக்கு நாசம்) என்ற ஆயத்துக்களை இணைத்து நீங்கள் தொழுகையை அணுகாதீர்கள். ஏனென்றால் தொழுகிறவர்களுக்கு நாசம் என்று திருக்குர்ஆன் கூறுகிறது என இஸ்லாத்தின் எதிரிகள் கூறுவதைப் போன்றே இந்த எதிரிகளும் இங்கு ஆட்சேபணை செய்திருக்கிருக்கின்றனர்.

1893 மே 22 முதல் ஜூன் 5 ஆம் தேதி வரை அமிர்தஸரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கும் அப்துல்லா ஆத்தம் என்ற கிறிஸ்தவ பாதிரிக்கும் இடையில் இயேசுவின் தெய்வத்துவம் எனும் தலைப்பில் ஒரு விவாதம் நடைபெற்றது. அப்போது இஸ்லாத்தின் மகத்துவமிக்க போதனைகளை நிரூபித்து ஹஸரத் அஹ்மது(அலை) அவர்கள் வாதாடினார்கள். இஸ்லாத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் பாதிரி அப்துல்லா ஆத்தம் கடுமையாக விமர்சித்து வாதாடினார். ஒருமுறை பாதிரி அப்துல்லா ஆத்தம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தஜ்ஜால் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அப்துல்லா ஆத்தம் தெளபா செய்து பாவமன்னிப்பு கோராமலிருந்தால் 15 மாதங்களுக்குள் நாசமடைவார் என்று கூறினார்கள்.





இதற்கிடையில் பாதிரி அப்துல்லா ஆத்தம் பாவமன்னிப்பும் தெளபாவும் செய்து கொண்டிருந்தார். இதன் காரணமாக அவர் 15 மாதங்களுக்குள் மரணிக்கவில்லை. இது தங்களுக்கு கிடைத்த வெற்றியும் இஸ்லாத்திற்குக் கிடைத்த தோல்வியுமாகுமென்று கிறிஸ்தவர்கள் கோஷமிட்டு இஸ்லாத்தையும் முஹம்மது நபி(ஸல்) அவர்களையும் கேவலமாக பேசி ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸிஹ் (அலை) அவர்கள் அப்துல்லா ஆத்தம் மன்னிப்பு கோரியதனால் தான் நாசத்திலிருந்தும் தப்பினார் என்றும், தான் தெளபா செய்யவோ மன்னிப்பு கோரவோ இல்லை என்று வெளிப்படையாக சத்தியம் செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு சத்தியம் செய்தால் நான் அன்னாருக்கு 4000/- ரூபாய் சன்மானமாக கொடுப்பதாகவும் அறிக்கை விடுத்தார்கள். இதனை ஏற்க மறுத்த பாதிரி அப்துல்லா ஆத்தம் சில மாதங்களுக்குள் மிகவும் கேவலமாக மரணித்துவிட்டார். இவ்வாறு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது அஞ்ஜாமே ஆத்தம் (ஆத்தமின் முடிவு) எனும் நூலில் விளக்கமான முறையில் இஸ்லாத்திற்கு கிடைத்த வெற்றியைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

இதனைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது அன்வாருல் இஸ்லாம் எனும் நூலில் எழுதுகிறார்கள்:

''எவரொருவர் விளக்கமான இந்த தீர்ப்புக்கெதிராக வெறுப்பும் வைராக்கியமும் கொண்டு ஏசவும், வேண்டுமென்றே பொய் கூறவும் செய்து கிறிஸ்தவர்களுக்கு வெற்றி கிடைத்தது என்று அடிக்கடி கூறுகிறாரோ சிறிதளவு கூட வெட்கமில்லாமல் நீதியுடனும் நியாயத்துடனும் எங்களுடைய தீர்ப்புக்கு பதில் கூறாமல் ஏசுவதிலிருந்து விலகாமலும் எங்களுடைய வெற்றியை ஏற்காமலும் இருக்கிறாரோ (அவருடைய கூற்றின் படி) அவருக்கு வலதுல் ஹராம் (நெறி தவறிப் பிறந்தவர்) ஆவதில் திருப்தி இருக்கின்றது போலும். நேரான பாதையை ஏற்று கொள்ளாமல் இருப்பதும் அக்கிரமத்தின் அநீதியின் வழியை நேசிப்பதும் வலதுல் ஹராமின் (நெறி தவறிப் பிறந்தவரின்) அடையாளமாகும். நிச்சயமாக இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பது அல்லாஹ்வுக்குத் தெரியும். முஹம்மது நபியின் மார்க்கத்திற்குத் தான் வெற்றி கிடைத்திருக்கிறது. கிறிஸ்தவர்கள்தான் அவமானத்திற்காளானார்கள்.'' ***(அன்வாருல் இஸ்லாம் பக் 30, 31)***

இதுதான் உண்மை! அல்லாமல் தமது வெற்றியை ஏற்காதவர்கள் அனைவரும் வலதுல் ஹராம் (நெறி தவறிப் பிறந்தவர்) என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு போதும் கூறவில்லை.இஸ்லாத்தின் எதிரிகளுக்குக் கூட இந்த வார்த்தையை, திருக்குர்ஆனின் சொல்வழக்கின்படிதான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். இப்படிப்பட்டவர்களை திருக்குர்ஆனும் நெறி தவறிப் பிறந்தவன் (68:14) என்றே குறிப்பிடகின்றது. கிறிஸ்தவர்களுக்கு வெற்றியும் இஸ்லாத்திற்கு தோல்வியும் கிடைப்பது இந்த மவ்லவிமார்களுக்கு ஒரு பொருட்டுமல்ல. அப்துல்லா ஆத்தம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தஜ்ஜால் என்று கூறியதிலும் இந்த மவ்லவிமார்களுக்கு எந்தவொரு வருத்தமும் இல்லை போலும்.

மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களுக்கு எதிராக பாமர முஸ்லிம்களை தூண்டிவிட வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கம் தான் இந்த மவ்லவிமார்களுடையது. ஆனால் உண்மைக்கு எப்போதும் வெற்றிதான் கிடைக்கும். பொய்யிற்கும் பொய்யர்களுக்கும் எப்போதும் தோல்விதான் என்பது திருக்குர்ஆனின் போதனையாகும். இந்த பொய்யர்கள் நிச்சயமாக தோல்வியடைவார்கள். இவர்கள் இறைவன் புறமிருந்து அவமானத்திற்காளாகப் போகிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**ஆட்சேபணை எண் : 15**

மாதர்க்கரசி ஹஸ்ரத் ஃபாத்திமா அம்மையாரைப் பற்றி இக்கயவன் (நவூதுபில்லாஹ்) எழுதி வைத்துள்ளதைப்பாரீர்.

''எனது தொடையில் ஹஸ்ரத் பாத்திமா (ரலி) அவர்கள் தனது தலையை வைத்து இருந்தார்கள். மேலும் நான் அவர்களில் ஒருவன் என்று எனக்கு காண்பித்தார்கள்.

*(எக்கல்த்தீகா இஸாலா ஹாஷியா பக் - 11)*

**பதில்:** மேற்குறிப்பிடப்பட்ட நூலில் இப்படிப்பட்ட ஒரு சம்பவமே கூறப்படவில்லை. இந்த மவ்லவிமார்கள் இந்த புத்தகத்தை படிக்கவே இல்லை.

ஆனால் துஹ்ஃபா கோல்டவிய்யா எனும் நூலில் இந்த ஆன்மீகக் காட்சியைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.





''நான் ஓர் ஆன்மீகக் காட்சியில் (கஷ்ஃபில்) ஐந்து புனிதவான்கள் அதாவது ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்), ஹஸ்ரத் இமாம் ஹஸன், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன், ஹஸ்ரத் ஃபாத்திமத் துஸ்ஸுஹரா, ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோர்களை பாதி உணர்வில் கண்டேன். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அன்பு நிறைந்த தாயாரைப் போன்று இந்த எளியவனுடைய தலையை தமது மடியில் வைத்தார்கள். *(தொஹ்பா கோல்டவிய்யா பக் 19)*

இங்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் பாத்திமாவை **தமது தாயாராக** கனவில் கண்டார்கள். இந்த மவ்லவிமார்கள் இங்கு கஷ்ஃப், அன்பு நிறைந்த தாயார் ஆகிய சொற்களை வேண்டுமென்றே கூறாமல் மறைத்திருக்கிறார்கள். இது இவர்களுடைய கெட்ட எண்ணத்தைக் காட்டுகின்றது.

முஸ்லிம்களின் எல்லா பிரிவுகளும் அதிகமாக மதிப்பளிக்கும் ஹஸ்ரத் ஸையத் அப்துல் காதிர் ஜீலானி தமது ஓர் ஆன்மிகக் காட்சியில் (கஷ்ஃபில்) இவ்வாறு கூறுகிறார்கள்:

''நான் ஹஸ்ரத் ஆயிஷாவின் மடியில் இருக்கிறேன். முதலில் நான் அவருடைய வலது மார்பிலிருந்து பால் நுகர்ந்தேன். பின்னர் இடது மார்பிலிருந்தும் பால் நுகர்ந்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாதர் (ஸல்) வருகை தந்தார்கள்.

*(கலாயிதுல் ஜவாஹிர்ஃபீ மனாக்கிபிஷ்ஷைக் அப்தில்ல் காதிர் ஜீலானி-பக்-57)*

இதனைப் படிக்கும்போது அலாவுதீனுடைய ரத்தம் கொதிப்படைந்து நரம்பு முறுக்கேறி காக்காவலி ஏற்பட வில்லையா? கவனிக்கவும்.

**ஆட்சேபணை எண்: 16**

நபியென்று கூறிய இக்கயவன் (நவூதுபில்லாஹ்) தன்னையே அல்லாஹ் என்று கூறி அல்லாஹ் என்ற பெயரையே இழிவுபடுத்தியுள்ளதைப் பாரீர்.

''கனவில் நான் என்னை அல்லாஹ்வாகவே கண்டேன். நிச்சயமாக நான்தான் அல்லாஹ் என்று உறுதி கொண்டேன். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் பக் : 564)

**பதில்:** ஹஸ்ரத் அஹ்மது (அலை) கூறினார்கள்:

''நான் கஷ்ஃபில் என்னை அல்லாஹ்வாகக் கண்டேன்.'' ஆனால் அன்னார் ஒரு போதும் தான் அல்லாஹ் என்று வாதம் செய்யவோ ஓர் அஹ்மதி முஸ்லிமும் அன்னாரை தெய்வமென்று நம்பவோ இல்லை. கனவை வெளிப்படையாக கொண்டு ஆட்சேபணை செய்வது நெறி கேடாகும்.

ஹஸ்ரத் யூசுப் நபி (அலை) தாம் கண்ட ஒரு கனவைப் பற்றி தமது தகப்பனாரிடம் கூறியதை திருக்குர்ஆன் இவ்வாறு எடுத்துரைக்கிறது:

''யூசுப் தமது தகப்பனாரிடம், எனது தந்தையாரே! பதினொன்று நட்சத்திரங்களும் சூரியனும் சந்திரனும் என்னை வணங்குவதாக (எனக்கு சுஜூத் செய்வதாக) நான் கண்டேன் என்று கூறினார்கள். (12:5)

ஹஸ்ரத் யூசுப் நபி (அலை) அவர்கள் கண்ட இந்த கனவை வெளிப்படையாகக் கொண்டு அன்னாரை நவூதுபில்லாஹ் கயவன் என்று கூற துணிவோமா?

தாம் கண்ட ஆன்மீகக் காட்சிக்கு விளக்கமளிக்கையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) கூறுகிறார்கள்:

''இந்தக் கனவிலிருந்தும் நான் அத்வைத வாதிகளைப் போன்று நான் கடவுள் ஆகிவிட்டேன் என்று கூறுவதில்லை. எனது கனவின் நோக்கமானது, புஹாரீ ஹதீஸில் கூறப்பட்ட ஒரு ஹதீஸின் நோக்கத்திற்கேற்றவாறுள்ளதாகும். அதாவது எனது அடியான் நவாஃபில் தொழுகைகள் காரணமாக அவன் கேட்கும் காது களாகவும் அவன் காணும் கண்களாகவும் அவன் பிடிக்கும் கைகளாகவும் அவன் நடக்கும் கால்களாகவும் நான் இருப்பேன் என்று இறைவன் கூறியதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(புஹாரி கிதாபுர்ரி காக் பாகம் 4 : பக் - 80)* ***(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் பக் 566)***

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கண்ட ஆத்மீகக் காட்சியைப் பற்றி மட்டும் வாசித்த இந்த மவ்லவிக்கு அன்னார் அதற்கு கொடுத்த விளக்கத்தைக் காண முடியவில்லையா? அதற்கு





அவர் அந்தப் புத்தகத்தை படிக்கவோ பார்க்கவோ செய்தால்தானே!!

கனவுக் காட்சிகளுக்கு விளக்கம் தரும் தஃத்தீருல் அனாம் என்ற புத்தகத்தில் இவ்வாறு காணப்படுகிறது:

''தான் இறைவனாகி விட்டதாக எவராவது கனவு காண்கிறார் என்றால் அதன் பொருள் அல்லாஹ் அவரை நேரான பாதையில் அழைத்துச் செல்வான் என்பதாகும். *(த:'த்திருல் அனாம் பீ:'த:'பீருல் மனாம். பக் - 90)*

இதன்படி, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கண்ட கனவின் விளக்கமானது அல்லாஹ் அன்னாரை நேரான பாதையில் நடத்தியுள்ளான் என்பதாகும்.

**ஆட்சேபணை எண்: 17**

காதியான் என்ற ஊருக்கு வருவது தான் ஹஜ் ஆகும். இன்று மக்கவில் செய்யப்படும் ஹஜ் வீணானதாகும். நோக்கம் நிறை வேறாததாகும். என்பது காதியானிக் கொள்கையாகும். (பைகாமே ஸுல்ஹ் 19 ஏப்ரல் 1933)

**பதில்:** இதுவும் அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டாகும். இவ்வாறு எழுதிய இந்த மவ்லவிமார்களுக்கு துணிவிருந்தால் மக்காவில் செய்யப்படும் ஹஜ் வீணானதாகும் என்று எழுதப்பட்ட நூலை கொண்டுவந்து காட்டட்டும். இவர்களால் ஒருபோதும் முடியாது என்பதை ஆணித்தரமாக தெரிவித்து கொள்கிறோம்.

இதற்கு நேர்மாறாக மக்காவுக்கு சென்று ஹஜ் செய்வதைப்பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை) கூறுவதை பாருங்கள். **''எவர்மீது ஹஜ் கடமையாகிவிட்டதோ அவருக்கு எந்த தடையும் இல்லையென்றால் அவர் ஹஜ் செய்யட்டும்''**

*(கிஷ்தி நூஹ் பக் : 14)*

இதில் வேடிக்கையென்னவென்றால் இந்த மவ்லவி எழுதிய இந்த புத்தகத்தின் பின்புற அட்டையில் காதியானிகள் காஃபிர்கள் என்பதால் மக்காவிற்கு ஹஜ் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்காவில் செய்யப்படும் ஹஜ் வீணானதாகும் என்பது அஹ்மதி

முஸ்லிம்களின் நம்பிக்கையென்றால் அவர்களுக்கு ஹஜ் செய்ய ஏன் தடைவிதிக்கப்பட வேண்டும்? அஹ்மதி முஸ்லிம்களும் ஹஜ் செய்ய மக்காவிற்கு செல்வதனால் தானே தடை விதிக்கப்பட்டுள்ளது. மவ்லவிமார்களே! நீங்கள் உங்களது கைகளினாலேயே உங்களது முகத்தில் கரியைப் பூசிக் கொண்டீர்களே! பொய்யர்கள் பெற்ற கேவலத்தை நீங்கள் அடைந்து விட்டீர்கள்.

இவர்கள் எழுதிய மற்ற ஆட்சேபனைகளுக்கும் எந்த ஆதாரமும் இல்லை. வெறும் பொய்கள்தான். அதற்கும் எமது பதில் : **அல்லாஹ், வானவர்கள், அனைத்து மக்கள் ஆகியோரின் சாபம் இவர்களுக்கு உண்டாவதே இத்தகையோருக்கான கூலி** *(திருக்குர்ஆன் 3:88)*

மிர்ஸா காதியானியின் திருவிளையாடல்கள் என்ற தலைப்பில் அடிப்படையற்ற ஆதாரமற்ற சில விஷயங்களை முல்லாக்கள் தமக்கே உரிய தரங்கெட்ட வார்த்தைகளில் பொய்யாகப் புனைத்து எழுதியுள்ளனர். பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என்பதே எமது முதல் பதிலாகும். இவர்கள் ஒழுக்கமுள்ளவர்கள் என்றால் அதனை நிரூபித்துக் காட்டட்டும்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் காலத்தில் அவர்களை மிக அருகில் பார்த்த மிகப் பெரிய ஆலிம் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி என்பவர் இவ்வாறு எழுதுகிறார்:

''பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதிய (மிர்ஸா சாஹிப் என்ப)வரின் நிலைமைகளை, சிந்தனைகளை எந்த அளவுக்கு நாம் அறிந்துள்ளோமோ அந்த அளவுக்கு அறிந்திருப்பவர் நமது காலத்தில் குறைவாகவே காணப்படுவர். மிர்ஸா சாஹிப் நமது ஊரைச் சேர்ந்தவர். இன்னும் சொல்லப்போனால் ஆரம்ப காலத்தில் அவர் நம்முடன் படித்தவராவார்.''

*(ஆதாரம் இஷா அத்துஸ்ஸுன்னா பாகம் 7 பக்கம் 6)*

அஹ்மதியல்லாத மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இன்னோரிடத்தில் எழுதுகிறார்:

''நமது கருத்தின் படி (மிர்ஸா குலாம் எழுதிய) பராஹீனே அஹ்திய்யா என்ற இந்த நூல், தற்போதைய காலத்தின் படி பார்க்கும் போது எத்தகைய நூல் என்றால், இதற்கு நிகரானது இன்று வரை இஸ்லாத்தில் இயற்றப்படவில்லை. அதை எழுதியவர் (மிர்ஸா சாஹிபும்) தனது பொருளாலும், உயிராலும், பேனாவினாலும், நாவினாலும், சொற்களினாலும் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதில் உறுதியானவராகத் திகழ்ந்தார். இதற்கு நிகரானதை முந்தைய முஸ்லிம்களிடம் மிகக் குறைவாகவே காண முடிகிறது.''
(ஆதாரம் : இஷா அத்துஸ்ஸுன்னா பாகம் 6, பக்கம் 6)





ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மரணித்த போது மவ்லானா **அபுல் கலாம் ஆஸாத்** அவர்கள் வக்கீல் என்ற பத்திரிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

''அந்த மனிதர் மிகப் பெரும் மனிதராவார். அவரது பேனா மந்திர கோலாக இருந்தது. நாவிலும் மந்திரம் இருந்தது. மூளையால் நிகழ்கின்ற வியக்கத்தக்க அற்புதங்களின் வடிவமாக அவர் திகழ்ந்தார். அவரது பார்வை மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும், குரல் அனைவரையும் ஒன்று திரட்டக் கூடியதாகவும் இருந்தது. அவரது விரல்களில் புரட்சியின் கம்பிகள் பின்னிப் பிணைந்திருந்தன. மேலும் அவரது இரு மணிக்கட்டுகளும் இரண்டு மின்சார சங்கிலிகளாக இருந்தன. அந்த மனிதர் எக்காளமாக மாறி கனவுலகில் உறங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு விழிப்பூட்டி கொண்டேயிருந்தார்........ மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி அவர்களின் மரணம் நாம் படிப்பினை பெறாமல் இருக்கக் கூடிய ஒன்றல்ல. அந்த இழப்பை அழித்து விடுவதற்காக அதனை ஓடிக் கொண்டிருக்கும் காலத்தின் கரங்களில் ஒப்படைத்து விட்டு நாம் பொறுமையுடன் இருக்க முடியாது. மார்க்க உலகில் அல்லது அறிவுலகில் புரட்சியை ஏற்படுத்தக் கூடிய இத்தகைய மனிதர்கள் எப்போதும் உலகில் வரமாட்டார்கள். வரலாற்று ஏடுகளில் இடம் பெறும் இத்தகையோர் மிகவும் குறைவாகத்தான் உலகில் தோன்றுகின்றார்கள். ஆனால் அவர்கள் வரும்போது உலகில் புரட்சியை உருவாக்கி காட்டிவிட்டு செல்கின்றார்கள்.''

மௌலானா ஆஸாத் அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

''Character-ஐ ஒழுக்கமுறையை பொறுத்த வகையில் மிர்ஸா சாஹிபின் மீது சிறிதளவு களங்கமாவது காணப்படுவதில்லை.

அன்னார் புனிதமும் பரிசுத்தமுமான வாழ்க்கையை நடத்தினார்கள். இறையச்சத்துடன் வாழ்ந்தார்கள். மிர்ஸா சாஹிபு நல்லொழுக்கம், நற்குணங்கள், மார்க்கத்திற்காக செய்த சேவைகள், இவைகளைப் பற்றிப் பார்க்கும்போது இந்தியாவிலுள்ள முஸ்லிம்களில் தனிப்பட்டதும் மகத்துவமிக்கதுமான, பொறாமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளார்கள். *(வகீல், அமிர்தஸர் 30, மே 1908)*

மேற்குறிப்பிட்டவைதான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடைய வாழ்க்கையை நேரில் கண்டவர்கள் கூறிய சாட்சியாகும். உண்மை இப்படி இருக்கும்போது. அவரை நேரில் காணாத, அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்காத காழ்ப்புணர்ச்சி கொண்ட இந்த முல்லாக்கள் எழுதியதை வைத்து தவறான முடிவுக்கு வந்து விட வேண்டாம் என முஸ்லிம்களை கேட்டுக் கொள்கிறோம்.

எல்லாம் வல்ல இறைவன் பாமர முஸ்லிம்களை வானத்தின் கீழ் கெட்டவர்களான குழப்பவாதிகளான இந்த முல்லாக்களிலிருந்தும் காப்பாற்றுவானாக என்று துஆ செய்கின்றோம்.

**நபிகள் நாயகம் காத்தமுன்னபிய்யீன்**

ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) கடைசி நபியென்று அஹ்மதிகள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அவர்கள் கொடும் காஃபிர்களென்று இந்த மவ்லவிமார்கள் தனது நச்சுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் திருக்குர்ஆனில் எங்கேயுமே எம்பெருமானார் (ஸல்) அவர்களள் கடைசி நபியென்றும் அன்னாருக்குப் பிறகு எந்த ஒரு நபியும் தோன்ற மாட்டார் என்றும் குறிப்பிடப்படவில்லை. திருக்குர்ஆனிலிருந்தும் இதனை நிரூபிக்கும் எந்தவொரு வசனத்தையும் எவராலும் எடுத்துக்காட்ட முடியாது. ஆனால் திருக்குர்ஆனில் ஒரே ஓர் இடத்தில் காத்தமுன்நபிய்யீன் என்ற சொல் வந்திருக்கிறது. அதற்கு இறுதி நபியென்ற பொருள் அல்லவென்றும், திரு நபியின் உம்மத்தைச் சார்ந்த அன்னாருடைய ஷரீஅத்திற்குட்பட்ட நபி வரலாம் என்றும் நிரூபித்து காட்டும் பல வசனங்களும் திருக்குர்ஆனில் இருக்கின்றதென்றும் இங்கு விளக்குகின்றோம். அதற்குமுன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)





அவர்களை நாங்கள் மற்ற எவரையும் விட ஊக்கத்துடன் காத்முன்நபிய்யீன் என்று நம்புகிறோம் என்பதற்கு ஹஸ்ரத் அஹ்மது(அலை) அவர்களுடைய கூற்றை சான்றாகத் தருகிறோம். அவர்கள் கூறுகிறார்கள்:

''நாயகம் (ஸல்) அவர்களை நாங்கள் காத்தமுன்நபிய்யீன் என்று நம்புவதில்லை என என்மீதும் என் ஜமாஅத்தின் மீதும் குற்றம் சாட்டப்படுகின்றது. எத்தகு திடநம்பிக்கையுடனும் ஆத்மீக ஞானத்துடனும் மன உணர்ச்சியுடனும் நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுல் அன்பியா என்றும் நம்பி உண்மைப்படுத்துகிறோமோ அதில் லட்சத்தில் ஒரு பகுதி கூட இந்த ஆட்சேபணை எழுப்புபவர்கள் நம்புவதில்லை.''

*(அல்ஹக்கம் பத்திரிகை 17.3.1905)*

இதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபி, அன்னாருக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார் என்று கூறும் அதே மூச்சில் 2000 வருடங்களுக்கு முன், இஸ்ரவேலர்களுக்காக மட்டும் தோன்றிய ஈஸா நபி வருவார் என்று இவர்கள் கூறுகின்றார்கள். ஒன்று மற்றொன்றுக்கு முரண்பட்ட இந்த நம்பிக்கை ஏளனத்திற்குரியதாக இருக்கின்றது.

காத்தமுன் நபிய்யீன் எனும் ஆயத்தைப் பற்றி சற்று விளக்கமாக இங்கு கூற கடமைப்பட்டுள்ளோம். அல்லாஹ் கூறுகிறான்:- முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களிலுள்ள ஆண்கள் எவருக்கும் தந்தையாக இல்லை. எனினும் அவர் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களின் முத்திரையுமாக விளங்குகிறார். (33:41)

இந்த ஆயத்தில் கூறப்பட்ட காத்தம் என்ற சொல் உண்மையில் முத்திரை என்றே பொருள்படும். உலக வழக்கில் முத்திரையை உபயோகிப்பது ஒன்றை உறுதிப்படுத்துவதற்கே யொழிய அது முடிந்து விட்டது என்று காட்டுவதற்கல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில அரசர்களுக்கு கடிதங்கள் அனுப்பியபோது அதில் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற முத்திரையை இட்டிருந்தார்கள். இது எம்பெருமானார் (ஸல்) தான் இக்கடிதங்களை எழுதியவர் என்று உறுதிப்படுத்துவதற்கேயன்றி கடைசி கடிதம் என்று காட்டுவதற்கல்ல.

முந்தைய நபிமார்கள் உண்மையாளர்கள் என்பதை உறுதிப்படுத்தும் முத்திரையாக முஹம்மது நபி (ஸல்) திகழ்கிறார்கள் என்று நபிமார்களின் முத்திரை என்ற சொற்றொடருக்கு விளக்கமாகும். அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குப் பிறகு தோன்றவிருக்கின்ற நபிமார்களும் அவர் மூலமாகவே உண்மைப் படுத்தப்படுவார்கள் என்ற கருத்தும் இதில் இருக்கிறது. அதாவது எம்பெருமானாருடைய சாட்சி முத்திரையில்லாமலோ, புதிய ஷரீஅத்துடனோ இனிமேல் எந்தவொரு நபியும் தோன்ற மாட்டார்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை)அவர்கள் தமக்குக் கிடைத்த நபித்துவ பட்டத்தின் உண்மையைப்பற்றி கூறுகிறார்கள்:

''நான் நபிகள் நாயகத்தின் உம்மத்தல்லாமலும் அவர்களை பின்பற்றாமலும் இருந்திருந்தால் உலகிலுள்ள அனைத்து மலைகளின் அளவுக்கு எனது செயல்கள் இருந்திருந்தாலும் இறைவன் என்னுடன் உரையாடும் சிறப்பு ஒருபோதும் எனக்கு கிடைத்திருக்காது. ஏனென்றால் தற்போது முஹம்மதிய்ய நுபுவ்வத்தைத் தவிர ஏனைய எல்லா நுபுவ்வத்துகளும் நிறுத்தப்பட்டுள்ளன. ஷரீஅத்துடைய ஒரு நபியும் இனி வரவே மாட்டார். ஷரீஅத்தில்லாத நபி வரலாம். ஆனால் அவர் முதலில் ஓர் உம்மத்தியாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் நான் உம்மத்தியாகவும் நபியாகவும் இருக்கிறேன்''. (தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 24,25)

காத்தம் என்ற சொல்லிற்குத் தலை சிறந்தவர் என்ற பொருளே அரபி மொழி வழக்கின்படி அளிக்கப்பட்டு வருகிறது. மொழி வழக்கிலுள்ள சொற்றொடர்கள் இதற்குச் சான்றாகும். உதாரணமாக,

காத்தமுல் அவ்லியா (வலிமார்களுக்கு காதம்) காத்தமுஷ்ஷுஅரா (கவிஞர்களுக்குக் காத்தம்) காத்தமுல் முஃபஸ்ஸிரீன் (திருக்குர்ஆன் விளக்கவுரையாளர்களுக்கு காத்தம்) காத்தமுல் முஹத்தஸீன் (ஹதீஸ் வல்லுனர்களில் காத்தம்) காத்தமுல் முஹாஜிரின் (ஹிஜ்ரத் செய்தவர்களுக்கு காத்தம்)

இவ்வாறு ஏராளமான சொற்றொடர்கள் இதற்கு சான்றுகளாகும். அரபி அகராதியின்படி பன்மையுடன் காத்தம் என்ற சொல் வந்தால் அதற்குச் சிறந்தவர் என்ற பொருளைத் தவிர வேறு பொருள் தர இயலாது.





ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை நோக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''அன காத்தமுல் அன்பியாயி வ அன்த்த யாஅலிய்யு காத்தமுல் அவ்லியாயி. (தைலமி, தஃப்ஸீருஸ்ஸாஃபி) நான் காத்தமுல் அன்பியாவாக இருக்கிறேன். அலியே! நீர் காத்தமுல் அவ்லியாவாக இருக்கிறீர்.''

இங்கும் காத்தமுல் அவ்லியா என்றால் வலிமார்களின் இறுதியானவர் என்று பொருள் தர முடியாது. ஏனெனில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்குப் பின் பல வலிமார்கள் தோன்றியும் ஒப்புக் கொள்ளப்பட்டும் இருக்கிறார்கள். ஆகவே இங்கு கூறப்பட்ட காத்தமுல் அவ்லியா என்ற சொற்றொடருக்கு வலிமார்களில் சிறந்தவர் என்ற பொருள்தான் இருக்கிறது. அதேபோன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இந்த ஹதீதில் காணப்படும் காத்தமுல் அன்பியா என்பதற்கும் நபிமார்களில் சிறந்தவர் என்றே பொருள் தரவேண்டும். ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களே காத்தமுன்நபிய்யீன் என்ற வார்த்தைக்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்.

**அன ஸய்யிதுல் அவ்வலீனவல்**
**ஆஹரீன மினந்நபிய்யீன்**

நான் நபிமார்களில் இதுவரை வந்தவருக்கும் இனி வரவிருக்கின்றோருக்கும் தலைவனாக இருக்கிறேன்.

நீங்கள் மார்க்கத்தை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று மார்க்க அறிவிற்கான நற்சாட்சியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பெற்ற ஹஸ்ரத்ஆயிஷா (ரலி) அவர்கள், காத்தமுன் நபிய்யின் என்ற வாக்கியத்திற்கு என்ன பொருள் தந்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

**கூலூ இன்னாஹு காத்தமுல் அன்பியாயி வலாதகூலூ லாநபிய்ய பஅதஹு**

''நீங்கள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி காத்தமுல் அன்பியா என்று கூறுங்கள். அவர்களுக்கு பிறகு ஒரு நபியும் இல்லை என்று கூறாதீர்கள்.'' *(தக்மிலா பக்கம் 85, துர்ரேமன்சூர் பாகம் 5 பக்கம் 20)*

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மார்க்க அறிவிலும் ஹதீதுகளை அறிவிப்பதிலும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளார்கள். அத்தகைய ஒரு மார்க்கமேதை காத்தமுன்நபிய்யீன் என்ற வாக்கியத்தின் பொருளை உணர்ந்து அது நபிமார்களின் இறுதி என்ற பொருள் கொள்ளக்கூடாது என்பதை திட்டவட்டமாக தெளிவு படுத்துகிறார்கள்.

அஹ்மதி முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் ஏராளமான ஸலஃபுஸ் ஸாலிஹீன்களும் இமாம்களும் ஏனைய மார்க்க அறிஞர்களும் காத்தமுன்நபிய்யீன் என்ற வாக்கியத்திற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் கொடுத்து வரும் விளக்கத்தையும் அர்த்தத்தையும்தான் கொடுத்து வருகிறார்கள். சிலவற்றை இங்கு தருகின்றோம்.

**1. ஹனஃபி மத்ஹபின் இமாமான ஹஸ்ரத் முல்லா அலிய்யுல்காரீ கூறியுள்ளார்:**

''காத்தமுன் நபிய்யீன் என்பதன் பொருள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னாருடைய மார்க்கத்தை பலவீனப் படுத்தும் வகையிலும் உம்மத்தை சாராதவரும் புதிய வாதத்தையுடைய ஒரு நபியும் வரமாட்டார் என்பது மட்டுமே ஆகும்.'' (அல்மௌளூஆத் பக்கம்: 59)

**2. ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்தஸ் தஹ்லவி கூறுகிறார்கள்:**

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நபிமார்கள் முத்திரை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதன் பொருள் இறைவன் மனித இனத்திற்காக ஒரு புதிய ஷரீஅத்துடன் ஒரு நபியையும் அனுப்பமாட்டான் என்பது மட்டுமே ஆகும்.'' (தஃப்ஹீமாத்தே இலாஹிய்யா பாகம் 2, பக்கம் 72)

**3. ஹஸ்ரத் ஸையத் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்) கூறுகிறார்கள்:**

''நபிகள் நாயகத்திற்குப் பிறகு புதிய சட்டதிட்டங்களோடு-ஷரீஅத்தோடு நபி தோன்றுவது முற்றுப் பெற்றிருக்கிறது. அதனால்தான் நபிபெருமானார் அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று கூறப்பட்டுள்ளது.'' (அல்இன்ஸானுல் காமில் பாகம்1, பக்கம் 98)





**4.ஹஸ்ரத் இமாம் ராஸீ (ரஹ்) கூறுகிறார்கள்:**

''மனித சுகபாவங்களில் காத்தமாக (சிறப்பாக) விளங்குவது அவனது மூளையாகும். நமது ரஸூல் கரீம் (ஸல்) காத்தமுன் நபிய்யீன் ஆனதால் எல்லா நபிமார்களைவிட சிறப்பானவர்களாகத் திகழ்கிறார்கள். மனிதன் ஏனைய படைப்பினங்களில் காத்தம் ஆனதனால் அவன் ஏனையவைகளை விட சிறப்பான படைப்பினமாகின்றான்.'' (தஃப்ஸீர் கபீர் பாகம் 6 பக்கம் 31)

**5. அல்லாமா இப்னு குல்தூன் எழுதுகிறார்கள்:**

''நுபுவ்வத்தில் முழுமைத் தன்மை கிடைக்கப்பெற்றதனால் அண்ணல் நபி பெருமானார் (ஸல்) காத்தமுன்நபிய்யீன் ஆக இருப்பது போல் விலாயத்தில் முழுமைத் தன்மை அடைபவரை காத்தமுல்அவ்லியா என்று கூறப்படுகின்றது.'' (முகத்தமா இப்னி குல்தூம் பக்கம் : 271)

இவ்வாறு ஏராளமான மார்க்க அறிஞர்கள் காத்தமுன் நபிய்யீன் என்ற சொற்றொடருக்கு மிகவும் தெளிவான விளக்கம் கொடுக்கும்போது இறுதி நபி என்ற குறுகிய பொருளை எவ்வாறு காத்தமுன் நபிய்யீன் என்ற வாக்கியத்திற்கு கொடுக்க முடியும்?

இந்த மவ்லவிமார்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதி நபி என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இறுதி நபிக்கொள்கைக்கு ஆதரவாக ஒரு திருக்குர்ஆன் வசனமோ, ஒரு ஹதீஸோ இவர்கள் குறிப்பிடுவதில்லை. ஷரீஅத் என்பது திருக்குர்ஆன், சுன்னத், ஹதீஸ் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும் என்ற உண்மை கூட இவர்களுக்குத் தெரியாமற் போய் விட்டது. திருக்குர்ஆன், ஹதீஸ் சான்றுகளை இவர்களது இந்த புத்தகத்தில் எங்கும் காணோம். மாறாக பொய்யிற்கும் ஏச்சிற்கும் தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

புனித திருக்குர்ஆனை ஆராயும்போது, அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில், அன்னாரைப் பின்பற்றுபவர்களிலிருந்தும் நபிமார்கள் தோன்றலாம் என்பதற்கான சான்றுகள் காணக்கிடக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டை மட்டும் இங்கு தருகின்றோம்.

சிலர் நம்மிடம் குர்ஆன் இருக்கின்றது, அதுவே நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது அல்லவா? எனவே எந்த ஒரு நபியும் இனி தோன்றும் அவசியம் இல்லை என்று கூறுகின்றார்கள். இத்தகையோர் திருக்குர்ஆனை தங்களது வழிகாட்டியாகவும் இமாமாகவும் வார்த்தைகள் அளவில் கூறுகிறார்களேயொழிய அதன் போதனைகளை எடுத்து நடப்பவர்களல்ல.

திருக்குர்ஆன் 57 ஆம் அதிகாரம் 17,18 வசனங்களில் வருவதாவது :

''ஈமான் கொண்டவர்களுக்கு அவர்களின் இதயங்கள் அல்லாஹ்வை நினைத்தும் அவன் இறக்கிய சத்தியத்தைக் கவனித்து அஞ்சவும் அவர்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டவர் களைப் போல் ஆகாமலிருக்கவும் கூடிய காலம் இன்னும் வரவில்லையா? அவ்வேதம் கொடுக்கப்பட்டவர்களில் ஒரு நீண்டகாலம் சென்றதற்குப் பிறகு அவர்களுடைய இதயங்கள் கடினமாகிவிட்டன. அவர்களில் பெரும்பாலோர் வரம்புமீறி நடக்கின்றவர்களாயிருந்தார்கள். நிச்சயமாக அல்லாஹ் பூமியை அதன் மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பிக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காகவே நிச்சயமாக நாம் உங்களுக்கு தெளிவான வசனங்களை விளக்கித் தந்துள்ளோம்'' (57:17,18)

இந்த திருவசனம் முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப்போல் அதாவது தவ்ராத்தைப் பெற்ற யூதர்களைப்போல் இறைவனைப் பயந்து கடின உள்ளத்துடன் வரம்பு மீறி நடப்பவர்களாக ஆகாமலிருக்க இன்னும் நேரம் வரவில்லையா? என்று கேட்கின்றது. இந்த கேள்வியை எழுப்பி நிச்சயமாக அல்லாஹ் பூமியை அதன் மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பிக்கின்றான் என்று அல்லாஹ் கூறுகின்றான். திருக்குர்ஆனைப் பெற்ற முஸ்லிம்கள் மத்தியிலும் இறைவன் தனது சட்டத்தின்படி தன் தூதரை அனுப்புவான் என்பதையே இந்த இறைவசனம் மிகத் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சற்று சிந்தனை செய்து பார்க்கவும். திருக்குர் ஆனின் போதனைகளின்படியும் ஹதீஸுகளின் வழிகாட்டுதல்களின்படியும் அவற்றிற்கேற்ப இஸ்லாமிய பண்டிதர்களின் கூற்றுகளின் படியும்





இன்றைய முஸ்லிம்கள் இறைவனை நினைத்து அவனை பயந்து வாழ்க்கை நடத்துகின்றார்களா? அல்லது யூதர்களைப்போல் மார்க்கத்தை மறந்து பெயரளவில் நாங்களும் முஸ்லிம்களே என்று வாழ்கின்றார்களா? ஈஸா நபி (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்த யூதர்களைப் போன்று வானத்திலிருந்து வரும் எலியாவை எதிர்பார்த்திருப்பதுபோல் வானத்திலிருந்து இறங்கும் ஈஸா நபியை எதிர்பார்த்திருப்பதும் இறையருளான நுபுவ்வத்தை மறுப்பதும் இன்றைய முஸ்லிம்கள் இஸ்லாத்தைவிட்டு வெகுதூரம் போய்விட்டார்கள் என்பதைக் காட்டும் அடையாளமாகும்.

மக்களில் (முஸ்லிம்களில்) ஒரு காலம் வரும் அப்போது இஸ்லாத்தில் அதன் பெயரும் திருக்குர்ஆனில் அதன் எழுத்துகளும் மட்டுமே எஞ்சியிருக்கும். அவர்களுடைய பள்ளிவாயில்கள் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கும். அவைகளில் ஹிதாயத் எனும் நேர்வழி இருக்காது. அவர்களுடைய உலமா வானத்தின் கீழ் கெட்டவர்களாக இருப்பார்கள் (மிஷ்காத்) என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இந்த காலத்தில் நிறைவேறியிருக்கிறது. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட வசனத்தின்படி சீர்கெட்டுப்போன முஸ்லிம்கள் மத்தியில் ஒரு நபி தோன்றுவது அவசியமில்லையா?

இன்றைய முஸ்லிம்கள் மிகவும் சீர்கெட்ட நிலையில் இஸ்லாத்தின் போதனைகளுக்கும் கட்டளைகளுக்கும் எதிராக வாழ்க்கை நடத்துவது பற்றி ஆலிம்களுக்கு ஒரு கவலையுமில்லை. ஆனால் இந்த முஸ்லிம்களை இஸ்லாத்தின் பாதையில் நடத்த இந்த உம்மத்திலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) கூறியதற்கேற்ப ஓர் இறை தூதர் தோன்றுவதில்தான் இவர்களுக்கு எதிர்ப்பும் காழ்ப்புணர்ச்சியும் இருக்கிறது.

நாம் தினமும் தொழுகையில் எத்தனையோ தடவை சூரா ஃபாத்திஹாவை ஓதும்போது இறைவனிடம் இவ்வாறு கேட்கின்றோம்:

''இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தக்கீம்.'' அதாவது இறைவா! நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. நீ யாருக்கு அருட்கொடை அளித்தாயோ அத்தகையவர்களின் வழியில் (எங்களை நடத்துவாயாக).

இந்த திருமறை வசனம், அருட்கொடை பெற்றவர்களின் வழியில் நம்மை நடத்தி அந்த அருட் கொடைக்கு எம்மையும் உரித்தாக்குமாறு நாம் இறைவனிடம் வேண்டுமாறு அந்த இறைவனே கற்றுத் தரும் பிரார்த்தனையாகும்.

இந்த அருட் கொடை பெற்றவர்கள் யார்? அவர்கள் எவ்வாறு அதனைப் பெறுவார்கள் என்பனவற்றை திருக்குர்ஆனில் அல்லாஹ் விளக்கமாக இவ்வாறு கூறுகிறான்:

''எவர்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் (நபிகள் நாயகத்திற்கும்) முழுமையாக கட்டுப்பட்டு நடப்பார்களோ அத்தகையவர்கள் அல்லாஹ் அருட்கொடை அளித்த நபிமார்கள், ஸித்தீக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் ஆகியோராக இருப்பவர்கள். இது அல்லாஹ் அளித்துள்ள அருட்கொடையாகும். அல்லாஹ் அறிவில் முழுமை பெற்றவனாக இருக்கின்றான். (4:71)

''இறைவனுக்கும் அவனது திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவர்களை இறைவன் நபிமார்களாகவும் ஸித்தீகுகளாகவும் ஷஹீதுகளாகவும் ஸாலிஹீன்களாகவும் ஆக்குவான் என்றும் அவர்கள் பெறும் இவ்வுயர் பதவிகள் இறைவன் அளிக்கும் அருட்கொடைகளாகும் என்றும் இத்திருவசனம் வெளிப்படுத்துகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபியும் தோன்ற முடியாது என்று கூறுவதென்றால் அது மேலே கூறப்பட்ட திருமறைவசனத்திற்கு முரண்பட்டதாகும். ஏனென்றால் 'எங்களை அருட்கெடை பெற்றவர்களின் வழியில் நடத்துவாயாக' என்று ஒவ்வொரு முஸ்லிமும் தினமும் வேண்டுகிறார். இறைவனும் தனக்கும் தனது தூதருக்கும் முழுமையாக கீழ்ப்படிபவர்கள் நபி, ஸித்தீக், ஷஹீத், ஸாலிஹ் என்னும் அருட்கெடைகளை பெற்றுக் கொள்வார்கள் என்று கூறுகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு நபியும் தோன்ற மாட்டார் என்றால் இந்த வசனத்தில் ஸித்தீக், ஷஹீது, ஸாலிஹ் ஆகிய மூன்று பதவிகளை மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வாறல்லாமல் இங்கு முதலாவதாக நபிப்பதவியைத்தான் தனது அருட்கொடையாக அல்லாஹ்





கூறியிருக்கிறான். இந்த உம்மத்தில் ஸித்தீக், ஷஹீது, ஸாலிஹ் ஆகியோர் வரலாம். ஆனால் நபி மட்டும் வரக் கூடாது என்று கூறுவது இந்த 4 :71 வசனத்திற்கு முரண்படுகிறது அல்லவா?

மேலும் இறைவனுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கே இந்த ஆத்மீகப் பதவிகள் அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றியவர்கள் மட்டும்தான் இந்த அருட்கொடைக்கு உரியவர்கள். அவர்களிலிருந்து தான் இந்த நான்கு பதவிகளும் பெற்றவர்கள் தோன்ற முடியும்; தோன்ற வேண்டும்.

இக்காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள்தான் இத்தகைய ஒரு உம்மத்தீ நபி என்று வாதித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்ததன் காரணமாகத்தான் தமக்கு இறைவன் இந்த மிகப் பெரிய பதவியை தந்தருளியுள்ளான் என்று கூறினார்கள்.

இதனைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் விளக்கத்தை மேலே குறிப்பிட்டுள்ளோம்.

சுருங்கக் கூறுமிடத்து ஹஸ்ரத் நபிகள் நாயகத்தைப் பின்பற்றி ஒரு நபியும் இனி தோன்ற மாட்டார்கள். எம்பெருமானார் (ஸல்) எல்லா வகையிலும் இறுதி நபியாக இருக்கின்றார்கள் என்று நிரூபித்து காட்டும் ஒரு வசனமாவது திருக்குர்ஆனிலிருந்து எவராலும் எடுத்துக் காட்ட முடியாது என்று ஆணித்தரமாக கூறுகின்றோம்.

அதுமட்டுமல்ல இறுதிநபி என்று கூறக்கூடாது என்று இறைவன் திருக்குர்ஆன் 40 : 35 ல் கூறுகிறான். அவ்வாறு கூறுபவர்கள் வழி தவறியவர்கள் என்று குறிப்பிடுகிறான்.

''இதற்கு முன்னர் யூஸுஃப் தெளிவான சான்றுகளுடன் உங்களிடம் வந்தார். ஆனால் அவர் உங்களிடம் கொண்டு வந்தது குறித்து நீங்கள் ஐயப்பாட்டிலேயே இருந்தீர்கள். அவர் மரணமடைந்தபோது, **அவருக்குப் பின்னர் எந்தத் தூதரையும் அல்லாஹ் ஒருபோதும் அனுப்ப மாட்டான்** என்று நீங்கள்

கூறினீர்கள். இவ்வாறே அல்லாஹ், வரம்பு மீறுபவர்களாகவும் ஐயம் கொள்பவர்களாகவும் இருப்பவர்களை **வழிதவறியவர்கள்** என்று (முடிவு எடுத்துக்) கொள்கிறான்.''

எனவே முஸ்லிம்களாகிய நீங்கள் நடுநிலையோடு சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் முஸ்லிம்களின் எந்த பிரிவைச் சேர்ந்தவராக இருப்பினும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வார்த்தைகளை காதுகொடுத்து கேட்பீர்கள் என்பதில் ஐயமில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இக்கால முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியைக் குறித்து எச்சரித்துள்ளார்கள். அது மட்டுமல்ல இறுதியில் இஸ்லாம் பெறவிருக்கும் மகத்தான வெற்றியைக் குறித்தும் நற்செய்தி வழங்கியுள்ளார்கள். எனவே முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கையையும் நற்செய்தியையும் அலட்சியப்படுத்தக் கூடாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: இஸ்ரவேல் மக்கள் 72 பிரிவுகளாகப் பிரிந்தார்கள். என்னுடைய உம்மத்தினரோ 73 பிரிவுகளாகப் பிரிவர். அவற்றுள் ஒன்றைத் தவிர ஏனைய அனைத்தும் நரகத்திற்குரியவையே. அப்பொழுது இறைதூதரே! அந்தப் பிரிவு எது என்று தோழர்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள் என் நடைமுறையையும் என் தோழர்களின் நடைமுறைகளையும் கடைப்பிடிப்பவர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள்.(திர்மிதி)

சுருங்கக் கூறின், இக்கால முஸ்லிம்களின் நிலை எந்த அளவுக்கு சீர்குலைந்து விட்டதென்றால் அவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒருங்கிணைப்பது மனித சக்திக்கு அப்பாற்பட்ட வேலையாகி விட்டது. இன்றைய உலமா சபைகளோ பேரவைகளோ அமைப்புகளோ இந்த சீர்த்திருத்த வேலையை செய்யவே முடியாது. மாறாக எல்லாம்வல்ல அல்லாஹ் அதற்கான ஒரு தீர்வை வைத்திருக்கிறான். அதையே நாம் கடைபிடித்தாக வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

''1240 வருடம் கழித்து அல்லாஹ் இமாம் மஹ்தியை அனுப்புவான்.''

***(அந்நஜ்முஸ் ஸாகிப் தொகுதி 2, பக்கம் 209)***





ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு சொல்லுக்குச் சொல் நிறைவேறிவிட்டது என்பதை உங்களிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஹிஜ்ரி 1250 ஆம் ஆண்டு (கி.பி. 1835) பிறந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தாமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட இமாம் மஹ்தி என அல்லாஹ் தன்னிடம் அறிவித்ததாக வாதிட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைப்படி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைத் தோற்றுவித்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

''வாக்களிக்கப்பட்ட மஸீஹும், மஹ்தியும், உட்புற வெளிப்புற பிளவுகளுக்கான நீதிபதியும் நான்தான் என அல்லாஹ் தனது தூய்மையான மகத்துவமிக்க வெளிப்பாடு மூலம் எனக்கு அறிவித்துள்ளான்.'' (அர்பயீன்)

''எவன் கையில் எனது உயிர் இருக்கிறதோ அந்த வல்லமைமிக்கவன் மீது ஆணையிட்டு நான கூறுகிறேன். புகாரியிலும் முஸ்லிமிலும் மற்ற ஸிஹாவுஸித்தாவிலும் வந்துள்ள ஹதீஸ்கள் மூலமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன்.'' (மல்ஃஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 313)

''நபிகள் நாயகம் (ஸல்) நபியுல்லாஹ் என பெயர் சூட்டியுள்ள அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன்.'' (நுஸூஹுல் மஸீஹ்)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

''நீங்கள் மஹ்தியைக் கண்டால் அவர் கைகளில் பைஅத் செய்யுங்கள். பனி மலைகளை முழங்காலில் கடக்க நேர்ந்தாலும் அவரிடம் செல்லுங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வுடைய கலீஃஃபாவும் மஹ்தியுமாவார்.'' (இப்னு மாஜா கிதாபுல் பித்ன்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளைக்கு கீழ்படிந்து இன்று கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இமாம் மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்து வருகின்றனர்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இன்று உலகில் 196 நாடுகளில் பரவியுள்ளது. 20 கோடிக்கும் அதிகமானோர் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். உலகளாவிய அளவில் ஒரே தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

உலகில் தவ்ஹீதை நிலைநாட்டுவதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் உலக மக்களை ஒன்றிணைப்பதும் உலகளாவிய சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதுமே இந்த ஜமாஅத்தின் குறிக்கோளாகும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபாவான அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்...) அவர்களின் தலைமையின் கீழ் ஒரே ஜமாஅத்தாக செயல்பட்டு வருகிறது. முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா என்னும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி அமைப்பின் மூலமாக உலகில் 24 மணி நேரம் இஸ்லாமிய பிரசாரம் செய்து வருகிறது. உலகெங்கும் ஆயிரக்கணக்கான பள்ளிவாசல்களையும் கட்டியுள்ளது. பல்வேறு உலக மொழிகளில் திருக்குர்ஆனை மொழிபெயர்த்து உள்ளது. எனும் இந்த ஜமாஅத்தின் தொண்டு நிறுவனம் மூலமாக மனிதயின தொண்டாற்றி வருகிறது. பல்வேறு நாடுகளில் மருத்துவமனைகளையும் கல்விக்கூடங்களையும் அமைத்து தொண்டு செய்து வருகிறது. இந்த ஜமாஅத்தின் உலகளாவிய பைத்துல் மால் அமைப்பின் மூலம் ஆண்டு தோறும் செய்யப்படும் மார்க்கச் சேவைகளும் மக்கள் சேவைகளும் ஏராளம் ஏராளம்.

எனவே அன்பிற்குரியவர்களே! முஸ்லிம்களின் சீர்த்திருத்தத்திற்காக அல்லாஹ் அனுப்பியுள்ள இமாம் மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ள முன் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம். இறுதி காலத்தில் தோன்றிய, மாநபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த இமாம் மஹ்தி இவர்தானா? என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கேளுங்கள். தூய்மையான உள்ளத்துடன் வெறுப்பு, வைராக்கியம், எதிர்ப்பு ஆகியவைகளை ஒதுக்கி வைத்து அந்த எல்லாம்வல்ல இறைவனிடம் மன்றாடுங்கள். இந்த எளிய வழியை நீங்கள் செய்து பார்க்கலாமே! அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பினை உங்களுக்கு நல்குவானக. ஆமீன்.



அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பற்றிய ஆட்சேபணைகளுக்கு பதில்